இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN

Registered in the Department of Post of Sri Lanka No. QD/119/News/2020. Founded 19 Feb.1876

St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 | Fax: 021 - 222 9041 | E-mail: editorkavalan@gmail.com, ISSN 1391-7633

மலர் : 144 | இதழ் : 17 | திகதி : 25.10.2020 | விலை : 30.00

## 20 ஆவது திருத்தத்தை அரசு கைவிடவேண்டும்

### இலங்கைக் கத்தோலிக்க ஆயர்கள் பேரவையின் மனப்பாங்கு

அரசமைப்பின் 20 ஆவது திருத்தச்சட்டவரைவை முன்நோக்கிக் கொண்டு செல்லவேண்டாம். அதனை உடனடியாகக் கைவிடவேண்டும் என்று இலங்கைக் கத்தோலிக்க ஆயர்கள் பேரவை, அரசிடம் அவசர கோரிக்கை விடுத்துள்ளது.

அத்துடன், புதிய அரசமைப்பை உருவாக்கும் பணிக்கு முன்னுரிமை வழங்குவதே சிறப்பு எனவும், 20 ஆவது திருத்தச் சட்டவரைவு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர் அது தொடர்பில் மீள் பரிசீலனை செய்யவேண்டும் எனவும் ஆயர்கள் பேரவை வலியுறுத்தியுள்ளது.

20 ஆவது திருத்தச் சட்டவரைவுக்கு பௌத்த மகாநாயக்கர்களும் தமது கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ள நிலையில் இலங்கைக் கத்தோலிக்க ஆயர் பேரவையின் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இது தொடர்பில் இலங்கைக் கத்தோலிக்க ஆயர்கள் பேரவை நேற்று விசேட அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

*அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு :*

மக்களின் இறைமை அனைத்து சந்தர்ப்பங்களிலும் பாதுகாக்கப்படவேண்டும் என்பதுடன், 20 ஆவது திருத்தம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட முன்னர் அதனை விரிவாக ஆராய வேண்டும். அனைத்து அதிகாரங்களும் தனி ஒருவர் வசமாவது ஜனநாயக நாட்டுக்குப் பாதகமான விடயமாக அமையும். பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை மக்களின் உண்மையான ஜனநாயக நிலைப்பாட்டைக் காண்பிப்பதில்லை. பாராளுமன்றத்தின் அரசமைப்புப் பேரவையூடாக புதிய அரசமைப்பொன்றை உருவாக்க வேண்டும். பொருட்கோடலை மேற்கொள்ள முடியாத வகையில் குறைபாடுகளின்றி அதனைத் தயாரிக்க வேண்டும் - என்றுள்ளது.

## நிறைவேறியது

### 20ஆவது திருத்தம்

### 156 பேர் ஆதரவு 65 பேர் எதிர்ப்பு

ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ தலைமையிலான அரசு, பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டவரைவு திருத்தங்களுடன் மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேறியது. இறுதி வாக்கெடுப்பில் 20 இற்கு ஆதரவாக 156 பேரும், எதிராக 65 பேரும் வாக்களித் தனர்.

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி ஆகியவற்றின் உறுப்பினர்கள் திருத்தத்துக்கு எதிராக வாக்களித் தனர்.

**20ஆவது திருத்தம்**

சிறப்புக்கட்டுரை பக்கம் 06

## பரு. மறைக்கோட்ட பொதுநிலையினர் கழகச் சிறப்புக்கூட்டம்



பருத்தித்துறை மறைக்கோட்ட பொதுநிலையினர் கழகத்தின் சிறப்புக்கூட்டம் கிளாலி புனித தோமையார் ஆலய வளாகத்தில் 26.09.2020 அன்று நடைபெற்றது. இதில் மறைக்கோட்ட இணைப்பாளர் அருட்பணி ப.இருதயதாஸ் அடிகள், மறைமாவட்ட இயக்குநர் அருட்பணி J.J. மௌலிஸ் அடிகள், மறைக்கோட்ட முதல்வர் அருட்பணி A. F. பெனற் அடிகளும் 60ற்கு மேற்பட்ட பொதுநிலையினரும் கலந்து கொண்டனர். அருட்பணி ஸ்ரனி அன்ரனி OMI அடிகளின் சிறப்புரை இடம்பெற்றது.

## பொதுநிலையினருக்கான கருத்தமர்வு



தருமபுரம் பங்குத்தந்தை அருட்பணி S.J.Q. ஜெயரஞ்சன் அடிகளின் ஒழுங்குபடுத்தலில் தருமபுரம் புனித சவேரியார் ஆலயப் பொது நிலையினருக்கும் விசுவமடு புனித பேதுருவானவர் ஆலயப் பொதுநிலையினருக்கும் "பொதுநிலையினரின் பொதுக் குருத்துவ அழைப்பும் பங்கேற்கும் அமைப்புகளும்" எனும் தலைப்பில் கருத்தமர்வு ஒன்று 04.10.2020 அன்று நடைபெற்றது. இக்கருத்தமர்வை யாழ் மறைமாவட்டப் பொது நிலையினர் கழக வளவாளர் திரு. இ.அ. அமலரட்ணம் அவர்கள் வழங்கியுள்ளார்.

## ஊர்காவற்றுறை விவசாயிகளுக்கு கரித்தாஸ் கியூடெக் உதவி



யாழ்ப்பாணம் கரித்தாஸ்-கியூடெக் நிறுவனத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் "வறுமைக்கான காரணங்களைக் கவனத்தில் கொள்ளலும் விவசாயிகளுக்கான உணவுப் பாதுகாப்பை உறுதி செய்தலும்" நிகழ்ச்சித்திட்டத்தின் இந்த ஆண்டிற்கான செயற்பாடுகள் ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இதில் 13 கிராம சேவையாளர் பிரிவின் 570 குடும்பங்களைச் சேர்ந்த வீட்டுத்தோட்டப் பயனாளிகளும் 27 முன்பள்ளிகளைச் சேர்ந்த சிறார்கள் மற்றும் அவர்களின் பெற்றோர்களும், 04 பாடசாலைகளைச் சேர்ந்த 1034 மாணவர்களும் பயனாளிகளாகத் தெரிவு செய்யப்பட்டு இவர்களிற்கான கொடுப்பனவுகளாக வீட்டுத்தோட்டம் செய்யும் குடும்பங்களிற்கு விதை தானியங்களும், விவசாய உபகரணங்களும், வீட்டுத்தோட்ட விவசாய செய்முறைக் கையேடுகளும் வழங்கப்பட்டன.

## பூநகரி மீனவர்களுக்கு கரித்தாஸ் கியூடெக் உதவி



கரித்தாஸ் வன்னி கியூடெக் நிறுவனத்தின் ஏற்பாட்டில் பூநகரிப் பிரதேசத்தில் உள்ள 25 மீனவக் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த சுவீடன் நாட்டில் உள்ள ஈழத் தமிழர் ஒன்றிய உறவுகளின் நிதிப்பங்களிப்புடன் 05.10.2020 அன்று ஒருலட்சத்து 92 ஆயிரம் ரூபா பெறுமதியான மீன்பிடி வலைகள் கரித்தாஸ் வன்னி கியூடெக் நிறுவனத்தின் இயக்குநர் அருட்பணி செ.செபஜீவன் அடிகளாரின் தலைமையில் பூநகரி கடற்தொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசத்தில் வழங்கி வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் பூநகரிப் பங்குத்தந்தை C. G. ஜெயக்குமார் அடிகளாரும் கலந்து சிறப்பித்தார்.

## வடக்குக் கிழக்கு ஆயர் மன்றத்தின் அழைப்பில் உலகனைத்தும் கொரோனா தீமையிலிருந்து விடுதலைபெற முழு நாள் செபம்

இல்லங்களிலும் கத்தோலிக்க நிறுவனங்களிலும் கடந்த 24.10.2020 சனிக்கிழமை அன்று கொடிய கொரோனாவிலிருந்து முழு உலகமும் விடுபட தமிழ் மறைமாவட்ட இறைமக்கள் வீடுகளிலிருந்தவாறே திருச்செபமாலை ஓதியும், ஒளிபரப்பாகிய ஆயர் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்பட்ட திருப்பலியிலும், நற்கருணை ஆராதனையிலும் இணைந்து செபித்தனர்.

# எமது எண்ணம்

## மனச்சாட்சிப்படி வாக்களித்தல் சமூக நீதிக்கானது ஆனால் இலங்கையில்?

இலங்கை அரசியல் யாப்பின் 20ஆவது திருத்தச் சட்டத்திற்கான நகல் வரைபு மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளினால் நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்த வரைபு தொடர்பாக ஆரம்பம் முதலே எதிர்ப்புகள் ஏற்பட்டிருந்தன. மக்கள் மத்தியில் இருந்த எதிர்ப்புகள் நேரடியாகத் தெரிந்திருக்கவில்லை. ஆனால் அரசியல் கட்சிகள், நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் இருந்த எதிர்ப்புகள் ஆதரவான கருத்துகள் வெளிப்படையாகவே தெரிந்திருந்தன. அரசசார்பற்ற நிறுவனங்கள், பொது அமைப்புகளின் எதிர்ப்புகள் மற்றும் ஊடகங்கள், ஊடக அமைப்புகளின் எதிர்ப்புகளும் நேரடியாகவே அறியக்கூடியதாக இருந்தது.

ஆனால் அரசியல் கட்சிகளில் அதுவும் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் எதிர்த்தரப்பு அரசியல் கட்சிகளின் எதிர்ப்புகள் பற்றிய உண்மையான நிலைப்பாடு வாக்கெடுப்பு நடைபெற்ற நேரமே வெளிப்படையாகத் தெரிந்தது. அதுவும் கட்சிகளில் அங்கம் வகித்திருந்த உறுப்பினர்கள் சிலர் தமது தலைமைக்குத் தெரியாமலே ஆதரவாக வாக்களித்திருந்தனர் என்பதுதான் இங்கே வேடிக்கை. வாக்கெடுப்பு நடைபெற்ற அன்றையதினம் பகல் முழுக்க 20ஆவது திருத்தச் சட்டத்திற்கான நகல் வரைபுக்கு எதிராகத் தமது இடது கைகளில் சிவப்புப் பட்டியணிந்து எதிர்ப்புத் தெரிவித்ததுடன், விவாதத்திலும் அதற்கு எதிராகப் பேசியுமிருந்தனர். ஆனால் அவ்வாறு செயற்பட்ட உறுப்பினர்களில் எட்டுப்பேர் அன்றிரவு 7.30க்கு இடம்பெற்ற வாக்கெடுப்பின்போது சிவப்புப் பட்டியோடுதான் வாக்கெடுப்பில் கலந்து கொண்டு ஆதரவாக வாக்களித்திருந்தனர். அரசியல்வாதிகள் நேரத்துக்கு நேரம் வெவ்வேறு விதமாகப் பேசுவார்கள் என்றுஅறிந்திருக்கிறோம். கட்சிமாறுவார்கள் எனவும் தெரிந்து வைத்திருக்கின்றோம். ஆனால் குறித்த விடயம் ஒன்றுக்கு எதிர்ப்பு வெளியிட்டுப் பேசிவிட்டு அடுத்த நிமிடமே அந்த விடயத்தைக் கண்ணை மூடிக்கொண்டு ஆதரவு கொடுப்பது என்பதை கடந்த வியாழக்கிழமை வாக்கெடுப்பின்போதுதான் மக்கள் அறிந்திருக்கிறார்கள்.

அரசியல் கட்சிகள் என்ற கட்டமைப்பு, அந்தக் கட்சிகளின் தலைமைகள், அரசியல் கட்சிகளின் மத்திய குழுக்கள், பொதுச் சபை என்ற நெறிமுறைகள் எல்லாமே மாறித் தற்போது தனிமனித முடிவுகள், விருப்பங்கள், பணம் என்ற போக்கில் நகர்ந்து வந்து அவைதான் அரசியல் முடிவுகள் என்ற நிலையுமாகிவிட்டது. இந்த நிலைமையை 2005ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 19ஆம் திகதி முதல் காண்கிறோம். ஆனால் 2019ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 19ஆம் திகதியில் இருந்து அரசியல் கட்சிகளே அவசியமில்லை. எல்லாமே ஒரு குடையின் கீழ் என்ற கோசத்துடன் வந்துவிட்ட சூழலையே கடந்த வியாழக்கிழமை இலங்கை நாடாளுமன்றத்தில் கண்டோம். கடும் எதிர்ப்புகளுக்கும் கருத்துமுரண்பாடுகளுக்கும் மத்தியில் அரசாங்கத் தரப்பு உறுப்பினர்கள் பலரும் இருந்த சந்தர்ப்பங்களும் உண்டு. ஆனால் ஒருவாறு அரசாங்கக் கட்சிகளுக்குள்ளேயே முரண்பாட்டில் உடன்பாடாகத் தற்காலிகமாக எதிர்ப்புத் தணிக்கப்பட்டு ஆதரவாக வாக்களித்தனர். இதனை ஓரளவுக்கு ஏற்கலாம். ஏனெனில் அரசாங்கம் என்ற நிலையில் இருந்து கொண்டு கூட்டுப் பொறுப்புடன் செயற்படுதல் என்ற தத்துவத்தின் கீழ் 20ஆவது திருத்த வரைபுக்கு ஆதரவு கொடுத்தார்கள் என்று ஏற்றுக்கொள்ளலாம்.

ஆனால் எதிரணி உறுப்பினர்கள் எட்டுப்பேரின் ஆதரவுடன் 20ஆவது திருத்தச் சட்டம் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளினால் அங்கீகரிக்கப்பட்டமைதான் நகைப்புக்கிடமானது. வாக்கெடுப்பில் ஆதரவாக 156 வாக்குகளும் எதிராக 65 வாக்குகளும் பெறப்பட்டன. ஏதிரணியைச் சேர்ந்த எட்டுப் பேரும் ஆதரவாக வாக்களித்திருக்கவில்லையானால் அரசாங்கத் தரப்பின் 148 ஆசனங்களுடன் நகல் வரைபு தோல்வியடைந்திருக்கும். ஆகவே தோல்வியில் இருந்து வெற்றிக்குக் கொண்டுவந்தது இந்த எடடுப்பேரின் கைகள்தான். கட்சி உறுப்பினர்கள் கட்சியின் முடிவுக்கு அமைவாகவே நாடாளுமன்றத்தில் நகல் வரைபுகளுக்கு ஆதரவாக வாக்களிக்க வேண்டும் என்பது இலங்கை அரசியல் கட்சிகள் ஒவ்வொன்றினதும் யாப்புகளின் விதிகளில் உண்டு. ஆனால் இலங்கை அரசியல் யாப்பில் கட்சி உறுப்பினர்கள் தமது கட்சி முடிவுகளுக்கு மாறாகத் தமது மனச் சாட்சிக்கு ஏற்ப வாக்களிக்க முடியுமென அரசியல் யாப்பில் சட்டம் இல்லை. ஆனால் இங்கே கட்சிகளின் கொள்கைகளுக்கு மாறாக எட்டு உறுப்பினர்கள் தங்கள் மனச்சாட்சிக்கு ஏற்ப வாக்களித்திருக்கின்றனர்.

அவர்கள் ஏன் வாக்களித்தார்கள் என்பது தொடர்பான உள் நோக்கம் அவர்களின் மனச்சாட்சிக்கு மாத்திரமே தெரியும். மனச்சாட்சிக்கு ஏற்ப வாக்களிப்பது என்பது மக்களுக்கானது, சமூக நீதிக்கானது. ஆனால் எட்டு உறுப்பினர்களின் மனச்சாட்சி? உடல்மொழியில் நாம் எதனையும் வெளிப்படுத்தலாம். ஆனால் மனச்சாட்சி உறுத்தும்! சரி இதைத்தான் விட்டுவிடுவோமே. 2016ஆம் ஆண்டு 19ஆவது திருத்தச் சட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்த உறுப்பினர்கள் பலர், அந்தச் சட்டமூலத்தை இரத்துச் செய்து கொண்டுவரப்பட்ட 20ஆவது திருத்த வரைபுக்கு ஆதரவாக வாக்களித்துள்ளனரே! அவர்களின் மனச்சாட்சியை என்னென்று சொல்வது? இது மக்களுக்கான அரசியல் அல்ல.

அருட்பணி.எஸ்.எமின்சிலி றொஷான்

## பங்குகளின் மறைப்பணிக்கு பொறுப்பானவர்கள் அனைத்துப் பங்குமக்களுமே!

### - பங்குகளின் புதுப்பித்தல் பற்றிய வத்திக்கான் திருமடலில் சுட்டிக்காட்டு -

பங்குத் திரு அவைகளின் மேய்ப்புப் பணி சம்பந்தமாக அண்மையில் வத்திக்கான் வெளியிட்ட The Parish Conversion of the Pastoral Community என்னும் திருமடலில் பங்குகளின் நற்செய்தி அறிவிப்புப் பணிக்குப் பொறுப்பானவர்கள் திருநிலையினர் மட்டுமல்ல, மாறாக, முழுப் பங்குச் சமூகத்தினரே என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

பங்கில் அங்கம் வகிக்கும் ஒவ்வொருவருக்கும் இக்கடமையைப் புரிய வைப்பதே பங்குத் தந்தையர்களினதும், திருநிலையினரினதும் கடமையாகும் என்றும் இத்திருமடல் எடுத்துரைக்கின்றது. குருக்கள், துறவிகள், பொதுநிலையினர் அனைவரினதும் அருங்கொடைகள் ஒன்றிணைந்ததான செயற்பாடுகளே பங்கின் வளர்ச்சிக்கு இன்றியமையாதவை என்று திருமடல் சுட்டிக்காட்டுகிறது.

மேற்படி திருமடல் பங்குத் திரு அவைகளின் புதுப்பித்தலுக்கு அவசியமான மேலும் பல விடயங்களைத் தெளிவுபடுத்துகிறது. பங்குகளில் வெறுமனே ஒரே விடயங்களைக் காலாகாலமாகத் திரும்பத் திரும்பச் செய்கின்ற செயற்பாடுகள் பங்குமக்கள் மத்தியில் சலிப்பு நிலையை ஏற்படுத்துமேயொழிய பங்குத் திரு அவையின் வளர்ச்சிக்கு உதவாது என்று குறிப்படும் இத் திருமடல், ஆன்மீக உத்வேகத்தைக் கொடுக்கக்கூடிய வகையிலான புதுமையான செயற்பாடுகளை பங்குச் சமூகம் முன்னெடுத்து நற்செய்தி அறிவிப்புப் பணியை ஆற்றவேண்டும் என்று அறிவுறுத்துகிறது.

பங்குமக்களின் நற்செய்தி அறிவிப்புப்பணி ஆர்வத்தை திருப்தி செய்கிற வகையில் பல பங்குத் திருஅவைகளில் செயற்பாடுகள் நடைபெறாமையால் பலர் தங்கள் கடமைகள் மட்டில் ஆர்வமற்று இருப்பதுடன் பங்கின் வளர்ச்சிபற்றி பற்றற்றவர்களாகவும் காணப்படுகிற நிலை பல பங்குகளில் அவதானிக்கப்படுவதாகவும் இம்மடலில் குறிப்பிடப்படுகிறது. இப்படியான குறைபாடுகளிலிருந்து விடுபட்டு ஒவ்வொரு பங்குச் சமூகமும் உயிர்த்துடிப்புள்ள திரு அவைகளாக மாற பெருமளவிலான பங்கு மனமாற்றத்தின் அவசியத்தை இத்திருமடல் ஒட்டு மொத்தமாக விளக்குகிறது.

குருக்கள், துறவிகள், பொதுநிலையினர் அனைவரும் கட்டாயம் வாசித்து செயற்படுத்த வேண்டிய ஒரு திருமடலாக இது விளங்குகிறது.

## 10 இலட்சம் குழந்தைகளின் செபமாலை

ஆறுதலின் அன்னையாம் அன்னைமரியாவை நோக்கிச் செபிக்க செபமாலையை கரங்களில் ஏந்துவோம் என்ற அழைப்புடன், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், அக்டோபர் 19, செய்தியை வெளியிட்டுள்ளார்.

'உண்மையான நம்பிக்கை, மற்றும், ஆறுதலின் அடையாளமான நம் அன்னையாம் மரியாவை நோக்கி நம் பார்வையை எழுப்பி, செபமாலையை கரங்களில் ஏந்த நான் மீண்டும் அழைப்பு விடுக்கிறேன். இன்று, உலகின் அமைதி, மற்றும், ஒன்றிப்பிற்காக பத்து இலட்சம் குழந்தைகள் உலகம் முழுவதும் செபமாலையை செபித்துக் கொண்டிருக்கிறார்கள்' என்ற சொற்கள் திருத்தந்தையின் செய்தியில் இடம்பெற்றிருந்தன.

மேலும், திருத்தந்தை வெளியிட்ட மூன்று செய்திகளில், முதல் செய்தியில், இவ்வுலகை தீமையிலிருந்தும் சோதனைகளிலிருந்தும் காக்கும் ஆயுதமான செபமாலையை கரங்களில் ஏந்தி, ஒவ்வொரு நாளும் செபிப்போம் என அழைப்பு விடுத்திருந்தார்.

தன் இரண்டாவது செய்தியில் மறைப்பரப்புப் பணியில் இயேசுவும் தூய ஆவியாரும் எவ்வகைகளில் நமக்கு உதவுகிறார்கள் என்பது குறித்தும், மூன்றாவது செய்தியில் நாம் இறைவனுக்குச் சொந்தமானவர்கள் எனினும், நாம் உலகிலிருந்து தனிமைப்பட்டவர்களாக இல்லாமல், பொதுநலனுக்காக அன்பின் பணியாளர்களாக செயற்படவேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறோம், எனவும் கூறியுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

## திருத்தந்தை புனித 2ம் யோவான் பவுல், ஒரு கொடை

திருத்தந்தை புனித 2ம் யோவான் பவுல் அவர்களின் திருநாள் சிறப்பிக்கப்பட்டதையொட்டி, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், அப்புனிதரின் வாழ்வில் விளங்கிய பண்புகளைசட சுட்டிக்காட்டிச் செய்தியை வெளியிட்டார்.

"வாழ்வின் மீது பற்று, இறைவனின் மறையுண்மை மீதும், மனிதர்கள் மீதும் ஈர்ப்பு ஆகிய பண்புகளைக் கொண்டிருந்த புனித 2ம் யோவான் பவுல் அவர்கள், திருஅவைக்கு இறைவனால் வழங்கப்பட்ட மிகச்சிறந்த கொடை. அவரது நம்பிக்கையை நினைவுகூர்வோம். அந்த நம்பிக்கை நமது சாட்சிய வாழ்வுக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்கட்டும்" என்ற சொற்கள், திருத்தந்தை வெளியிட்ட செய்தியில் இடம்பெற்றிருந்தன.

1920ம் ஆண்டு மே மாதம் 18ம் திகதி பிறந்த புனித 2ம் யோவான் பவுல் அவர்கள், 1978ம் ஆண்டு அக்டோபர் 16ம் தேதி திருஅவையின் தலைமைப்பணிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர், தன் தலைமைப் பணியை ஏற்றுக்கொண்ட, அக்டோபர் 22ம் திகதி அவரது திருநாளாகக் கொண்டாடப்படுகிறது.

புனித 2ம் யோவான் பவுல் அவர்கள், 1920ம் ஆண்டு பிறந்ததையொட்டி, அவரது பிறப்பின் 100வது ஆண்டு, இவ்வாண்டு, மே மாதம் 18ம் திகதி சிறப்பிக்கப்பட்ட வேளையில், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், புனித பேதுரு பெருங்கோவிலில் அமைந் துள்ள இப்புனிதரின் கல்லறையில் திருப்பலி நிறைவேற்றினார்.

1978ம் ஆண்டு அக்டோபர் 16ம் திகதி முதல், 2005ம் ஆண்டு ஏப்ரல் 2ம் திகதி அவரது மரணம் வரை 26 ஆண்டுகள், 5 மாதங்கள், 16 நாள்கள் பதவியில் நீடித்த திருத்தந்தை 2ம் யோவான் பவுல் அவர்களின் தலைமைப்பணி, திருஅவை வரலாற்றில், மூன்றாவது நீளமான தலைமைப்பணியாக அமைந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

## திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களைப் பற்றிய ஆவணப்படம்

"Francesco" என்ற தலைப்புடன், ஒரு புதிய ஆவணப்படம், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களைப் பற்றி உருவாக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க ஐக்கிய நாட்டில் வாழும் ரஷ்ய நாட்டவரான Evgeny Afineevsky அவர்கள் உருவாக்கியுள்ள இந்த ஆவணப்படம், உரோம் நகரில் நடைபெறும் திரைப்பட விழாவில் அக்டோபர் 21, திரையிடப்பட்டது.

முன்னாள் திருத்தந்தை 16ம் பெனடிக்ட், திருத்தந்தை பிரான்சிஸ் ஆகியோருடன் Evgeny Afineevsky அவர்கள் மேற்கொண்ட பல்வேறு நேர்காணல்களின் தொகுப்பாக உருவாக்கப்பட்டுள்ள இந்த திரைப்படத்தில், இன்றைய நெருக்கடி நிலையைத் திருத்தந்தை எவ்வாறு எதிர்கொள்கிறார் என்ற கருத்து வலியுறுத்தப்பட்டுள்ளதாகச் சொல்லப்படுகிறது.

# கொவிட் – 19 ஆன்மீகமும் வாழ்வியலின் திசைப்போக்குகளும்



அருட்கலாநிதி. ஸ்ரனி அன்ரனி

## அறிமுகம்

இன்று கொவிட் - 19 உலகளாவிய ரீதியில் பல்வேறு மாற்றங்களையும், தாக்கங்களையும் ஏற்படுத்தி வருகின்றது என்பதை மறுக்க முடியாது. பொதுவாக நேரிய தாக்கங்களையும் எதிர்மறையான பாதிப்புக்களையும் ஏற்படுத்தி வருகின்றது என்பதில் ஐயமில்லை. இது உடலோடு தொடர்புடைய உயிர்கொல்லி நோயாக நோக்கப்பட்டாலும் இதன் தாக்கங்களும் அதிர்வலைகளும் மனித குலத்தின் வாழ்வியலின் திசைப்போக்குகளைக் குறுகிய காலத்தில் மாற்றுகின்ற அளவிற்குச் செல்வாக்கு செலுத்தியுள்ளது என்பதே நிதர்சனமாகும்.

இன்று கொவிட் - 19 னின் தாக்கங்கள் பற்றியும், பாதுகாப்புத் தொடர்பாகவும் ஏராளமான தகவல்களும், மருத்துவ ஆய்வுகளும் பரவலாக வந்த வண்ணமுள்ளன. இதன் பின்புலத்தில் ஒரு கொவிட் ஆன்மீகத்தை உருவாக்குவது பற்றி நாம் சிந்திப்பது சாலப் பொருத்தமானது. இத்தகைய ஒரு ஆன்மீகம் இன்றைய சமூகச் சூழலுக்கு ஒத்திசைவான ஆன்மீகமாக வளர்ச்சி பெறலாம்.

பொதுவாக சமகால (Contexual) பார்வையும், நோக்கும் ஆன்மீக வாழ்விற்கு இன்றியமையாதது. இத்தகைய ஆன்மீகத்தை நாம் கட்டியெழுப்பவேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

## கொவிட் ஆன்மீகத்தின் தளம் என்ன?

பொதுவாக ஆன்மீகம் என்பது கடவுளையும், மனிதரையும் சார்ந்த வாழ்க்கை அனுபவம் என்று சொன்னால் மிகையாகாது. இதில் இரு கூறுகள் தொடர்புபட்டுள்ளன. இறைவனோடுள்ள உறவையும் அடுத்திருப்பவரோடு நாம் கொண்டுள்ள உறவையும் அடிப்படையாகக் கொண்டதாகும். இதில் சிலவேளைகளில் எமது ஆன்மீகத்தில் கடவுளை ஒரு கோட்பாடாகவும், பக்திக்குள் ஆராதனைக்குள் முடக்கும் ஒரு செயற்பாடாகவும் நோக்குகின்றோம். இது ஆன்மீக வாழ்வின் தொடக்க நிலைக்குப் பொருத்தமானதாகும்.

இதைத் தாண்டி கொவிட் உயிர்கொல்லி நோயின் வழியாக கடவுள் வெளிப்படுத்தும் செய்தியை, அனுபவத்தை கொவிட் ஆன்மீகத்தின் தளமாகக் கருதப்படவேண்டும். பொதுவாக இன்று கிறிஸ்தவமானது ஆன்மீகத்தை ஆழமான இறையனுபவத்தில் தோய்ந்ததாகக் கட்டியெழுப்ப கொவிட்டின் நேரிய தாக்கங்கள் எமக்கு உதவுகின்றது.

குறிப்பாக அகாவிட்டின் தாக்கமானது வாழ்வில் ஒரு வெறுமையை ஏ ற்படுத்தியுள்ளது. எதுவும் நிச்சயமானது, நிரந்தரமானதல்ல என்பதை வெளியரங்க வாழ்வில் ஏற்படுத்தியுள்ளது. இதன் தாக்கத்தில் தான் இன்றைய ஆன்மீகம் கட்டியெழுப்பப்படவேண்டும். நாம் வெறுமையில்தான் இறைவனை அனுபவிக்க முடியும். அத்தகைய ஆழமான இறையனுபவத்தின் மூலமே அடுத்தவரோடு உறவுகளைக் கட்டியெழுப்ப முடியும் என்பதே உண்மையாகும்.

இது இன்றைய நுகர்வுக் கலாசாரத்திற்குச் சவாலாக அமைகின்றது. இது கடவுளில் தங்கி வாழும் எளிமையான வாழ்விற்கு வழிவகுக்கின்றது. குறிப்பாக கொவிட்டின் தாக்கங்கள் அகத்தில், மனநிலைகளில் இறைவனோடு நெருங்குகின்ற அனுபவத்திற்கு இட்டுச் செல்கின்றபோதே ஆன்மீகம் ஒரு இறையனுபவமாக மாறுகின்றது. பக்தியையும், சடங்குகளையும் தாண்டிக் கிறிஸ்தவத்தை ஒரு வாழ்க்கை நெறியாக வாழ்வதற்கு உதவுகின்றது. உண்மையில் சொல்லப்போனால் கிறிஸ்துவின் வெறுமையில் (Kenosis) ஊன்றிய ஆன்மீகத்திற்கு வழிசமைக்கின்றது. பிரமாண்டங்களை விட எளிமையானவை, சிறியவை கவனத்தை ஈர்க்கக்கூடிய விதத்தில் ஒரு இயல்பான ஆன்மீகத்தை எமக்குள் உருவாக்கிக் கொள்ளலாம். கொவிட் இத்தகைய ஆன்மீகத்திற்கு அடித்தளமிடுகின்றது எனலாம்.

## பசுமையாக்கல் (Go Green) எமது கிறிஸ்தவ வாழ்வுடன் தொடங்குமா?

இன்றைய கொவிட் உயிர்கொல்லி நோக்குக் காரணமாக அமைவது நாம் இயற்கையை விட்டு விலகி வாழ்ந்த வாழ்க்கையும், எமது உணவுப் பழக்கங்களும் என்று சொன்னால் அது மிகையாகாது. உணவே நஞ்சாகி வயல்களெல்லாம் இரசாயனங்களால் விதவைகளாகி அதிக உற்பத்தியே முதன்மை பெற்றதினால், இயற்கையை நாமே தவறாகப் பயன்படுத்திக் கொண்டோம். இதனால் பசுமை இல்லாமல் வரட்சியோடு மழையின்மையால் காலநிலைகளில் பாரிய மாற்றங்கள் ஏற்படக் காரணமாகியது. இத்தகையதொரு பசுமையை ஏற்படுத்துவது இன்றைய காலத்தின் கட்டாயமாகும். அதைவிட மேலாக இன்று எமது வாழ்வில் அருகிப் போய்க்கொண்டிருக்கும் பசுமையான வாழ்விற்குத் தடையாயிருக்கும் அன்பின்மை, உறவின்மை, இரக்கமின்மை, சுயநலம் போன்றவற்றையும் சீர்தூக்கிப் பார்ப்பது சாலப் பொருத்தமானது.

பசுமையை இயற்கையில் மட்டுமல்ல, எமது அன்றாட கிறிஸ்தவ வாழ்விலும் எமது மாண்புமிக்க செயல்களால் ஏற்படுத்துவது இன்றியமையாதது. "பசுமை மறை மாவட்டம்" (Green Diocese) என்பது ஒரு நல்ல எண்ணக் கருவாக அமைந்தாலும் அதற்குச் சமாந்திரமான எமது கிறிஸ்தவ வாழ்வின் வேர்களுக்கும், ஊற்றுக்களுக்கும் திரும்பி எம்மைப் புதுப்பித்து பசுமையாக்க வேண்டியது இக் கொரோனாக் காலத்திற்கு உகந்த செயற்பாடாகும்.

கொரோனாக் காலத்தில் எமது மானிடத்தின் இருப்பை, மனிதத்தை பண்புகளைத் தேடிப்பார்க்கச் சந்தர்ப்பம் கிடைத்தது. இத்தகைய ஒரு புதுப்பித்தலுக்கு, மனமாற்றத்திற்கு, பசுமையான வாழ்விற்கு கொரோனாவில் ஊற்றெடுக்கும் ஆன்மீகம் இன்றியமையாதது. கொவிட் உயிர்கொல்லித் தாக்கத்தோடு வாழ்வது ஒரு எதிர்மறையான அனுபவமாக நோக்காது, அதனை நேர்மறையான சக்தியாக (Positive Energy) மாற்றி வாழ்வையும், இயற்கையையும் பசுமையாக்க முயற்சி செய்வோம். நாம் கிறிஸ்தவர்களாக வாழ்ந்தும் இன்னும் உறவுகளில், மனநிலைகளில், பிறர்நலம் பேணுவதில் பசுமை இல்லாத நிலையே காணப்படுகின்றது. எனவே எமது கிறிஸ்தவ வாழ்வைச் சாட்சியமாக வாழ்ந்து வாழ்வைப் பாதுகாப்பதோடு இயற்கையையும் பாதுகாப்போம்.

## புதிய நற்செய்தி அறிவிப்பு வடிவங்கள் New evangelization காலத்தின் கட்டாயம்!

காலத்தின் குறிகளை உய்த்துணர்ந்து திருஅவை தன் வாழ்வையும், இறைமக்களின் வாழ்வையும் இன்றைய சமகாலச் சூழலில் புதுப்பிக்க வேண்டியது காலத்தின் தேவையாகும். இன்று பங்கு அமைப்புக்கள் புதிய நற்செய்தி அறிவிப்பு பணியின் புதிய வடிவங்களுக்கான தேடல் தவிர்க்க முடியாது. இன்றும் திரு அவை சடங்கு திருஅவையாக (Cultic Church) பயணிக்க முடியாது. இதனால் சடங்குகள், பக்தி முயற்சிகள், ஆராதனைகள் தேவையில்லை என்பது அர்த்தமல்ல. அதைத் தாண்டி கிறிஸ்தவத்தை வாழ்க்கை முறையாக மாற்றுவதற்கு இன்னும் நீண்ட தூரம் பயணிக்க வேண்டியுள்ளது.

பங்கு வட்டத்திற்குள் இன்று காணப்படும் வடிவங்கள் ஒரு ஆரம்ப நிலையாகக் கருதப்படலாம். திருஅவை இயல்பிலேயே மறைபரப்பு இயல்பைக் கொண்டுள்ளது. கொரோனா ஆன்மீகத்தின் அடித்தளத்தில் புதுப்பித்தலை மேற்கொள்ள ஒரு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

இன்னும் பங்குத்தளங்களில் பெரும்பாலான இறைமக்கள் விளிம்பில் வாழும் மக்களாகவே (Periphery) காணப்படுகின்றனர். புதிய நற்செய்தி அறிவிப்புப் பணியானது இம்மக்களை உள்ளீர்க்கக் கூடிய விதத்தில் அமையவேண்டும். அம் முயற்சி ஆலயத்தை மையப்படுத்திய திருஅவையை நோக்கி நகர்த்தப்படும் செயற்பாடாக அமையாமல், இறைமக்களை மையப்படுத்திய திருஅவையாக (People Centered Church) உருமாற ஆவன செய்ய வேண்டியது தவிர்க்க முடியாத பணியாகும்.

இன்று கொரோனாவால் வறுமையில், இயலாமையில் துன்புறும் மக்களைத் தேடிச் சென்று பங்குத் திருஅவைக்குள் உள்வாங்க வேண்டியது பங்கு மேய்ப்புப் பணியின் முதற்தளமாக அமைய வேண்டும். இன்றைய மேய்ப்புப் பணியானது காலத்தின் குறிகளை உள்வாங்கி, நற்செய்தி அறிவிப்பின் புதிய வடிவங்களோடு இறை மக்களின் புதுப்பித்தலுக்கு வழிசமைக்க வேண்டும். வெறும் பங்கு அமைப்புக்களை மட்டும் கட்டிக் காப்பதற்கு முன்னுரிமை அளிக்காமல், மீள் நற்செய்தி அறிவிப்புப் பணிக்கான Re - evangelization தேடலை முனைப்புடன் மேற்கொள்ள பங்குத் திரு அவைகள் முன்வருவது இன்றியமையாதது. கொரோனாக் காலம் அதற்கான சூழலை (enviornment) தோற்றுவித்துள்ளது என்று கூறலாம்.


இன்று கிறிஸ்தவம் அமைப்புக்குட்பட்ட (structured) இறுக்கமான (rigid) பாதையில் செல்வது ஆரோக்கிய மானதாகக் கருதமுடியாது. கொரோனா ஆன்மீகத்தில் ஊன்றிய புதுப்பித்தலினூடாக பங்கு வட்டத்தினுள்ளேயே நின்று கொண்டு திருஅவையை தெருவிற்கு கொண்டு வந்து மக்களை உள்வாங்கிப் புதுப்பித்தலை மேற்கொள்ள முடியும். இன்றும் புதிய நற்செய்தி அறிவிப்புப் பணியின் வீரியம் மேய்ப்புப் பணித்தளத்திலும் சிந்தனையிலும் மாற்றத்தை ஏற்படுத்தியதாகத் தெரியவில்லை. திருத்தந்தை பிரான்சிஸ் தனது மகிழ்வின் நற்செய்தி (Evangelii Gaudium) என்ற மடலில் புதிய நற்செய்தி அறிவிப்புப் பணியின் வடிவங்களைக் கோட்டிட்டுக் காட்டுகின்றார். பங்கு அமைப்புக்களும், மேய்ப்புப் பணியும் புதுப்பிக்கப்படவேண்டிய காலத்திற்கு இன்று தள்ளப்பட்டுவிட்டது. சிந்திப்போம் புதுப்பித்து வாழ்வை மாற்றுவோம்.

> "பசுமை இயற்கையில் மட்டுமல்ல, எமது அன்றாட கிறிஸ்தவ வாழ்விலும் எமது மாண்புமிக்க செயல்களால் ஏற்படுத்துவது இன்றியமையாதது. "பசுமை மறை மாவட்டம்" (Green Diocese) என்பது ஒரு நல்ல எண்ணக் கருவாக அமைந்தாலும் அதற்குச் சமாந்திரமான எமது கிறிஸ்தவ வாழ்வின் வேர்களுக்கும், ஊற்றுக்களுக்கும் திரும்பி எம்மைப் புதுப்பித்து பசுமையாக்க வேண்டியது இக் கொரோனா காலத்திற்கு உகந்த செயற்பாடாகும்."

## மாற்று யோசனை வரவேற்கும்

ஒருமுறை வாலட் டிஸ்னி களைப்புடன் உறங்கச் சென்றார். கடுமையான உழைப்பு, பயங்கரமான களைப்பு படுத்தே விட்டார். நாள் முழுவதும் சுற்றுலா சென்று சுற்றி வந்த அவர் நண்பர்கள் அவர் அறையில் குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருந்தனர். டிஸ்னியால் தூங்க முடியவில்லை. வெறுமனே விட்டத்தைப் பார்த்துக் கொண்டிருக் கவும் விரும்பவில்லை. வித்தியாசமாக சிந்தித்தார். நண்பர்களின் குறட்டை ஒலியின் ஏற்ற இறக்க ஓசைகளைப் பதிவு செய்து அழகான சிம்பெனி இசையை உருவாக்கினார்.


# தமிழில் இலக்கியம் படைத்த ஐரோப்பிய குரு அருட்திரு லூயிஸ் டெய்சி அடிகள்




தமிழ் கலை இலக்கியத்தின் வளர்ச்சியில் பல ஐரோப்பிய குருமாரின் பங்களிப்பு இருந்துள்ளமையை நாம் அறிவோம் வீரமாமுனிவர். கார்ட்டுவல் அடிகள் என பலர் இங்கு வந்து தமிழ் கற்று தமிழ் மொழியிலே இலக்கியம் படைத்தமையானது தமிழின் வளர்ச்சிக்கு அனுகூலமாக இருந்தமையை நாம் அறிவோம். அந்த வகையில் இலங்கையிலும் மறைபணியாற்றிய பல குருவானவர்கள் தமிழ் படித்து தமிழில் பிரசங்கம் திருப்பலி என்பவற்றினை சிறப்பாக நிறைவேற்றி வந்ததனை நாம் அறிவோம். அவர்களில் பெல்ஜியதில் இருந்து இலங்கைக்கு வந்து குருவாக பணியாற்றியது மட்டுமன்றி தமிழ் கற்று தமிழில் இலக்கியம் படைத்த அருட்திரு லூயிஸ் டெய்சி அடிகளாரின் கலை இலக்கியப்பணிகளை இக்கட்டுரை அறிமுகம் செய்கின்றது.

### பணியும் பண்பும்

அருட்திரு லூயிஸ் டெய்சி அடிகளார் பெல்ஜியத்திலுள்ள புறூசெல்ஸ் என்னும் இடத்திலுள்ள நமோர் என்னும்










கிராமத்தில் 1898 கார்த்திகை மாதம் ஐந்தாம் திகதி பிறந்தவர். அவரது குடும்பம் இறை பக்தியுள்ள குடும்பம் இவரது மூத்த சகோதரன் புனித ஆசீர்வாதப்பர் சபையில் சேர்ந்து குருவாக திருநிலைப்படுத்தப்பட்டவர். இவரது தாய் மாமனார் மற்றும் மைத்துனர்கள் இருவரும் மறைமாவட்டக் குருக்களாக பணிபுரிந்தவர்கள்.

இத்தகைய பின்னணியில் இவரும் அமலமரித்தியாகிகள் சபையில் இணைந்து கற்று தியாக்கோன் நிலைக்கு உயர்த்தப்பட்டபின். ஏழு அமலமரித்தியாகிகளுடன் இலங்கைக்கு வந்தார். 1924 ஆம் ஆண்டு இலங்கையில் ஆயராக இருந்த கியோமர் ஆண்டகை அவர்களினால் யாழ் பேராலயத்தில் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார் 1924-1926 வரை இளவாலைப் பங்குத்தந்தையாக இருந்த இவர் அங்கு இருக்கும் போது தமிழை முறையாகக் கற்றார். எழுதவும் வாசிக்கவும் முறையாகப் பிரசங்கங்கள் செய்யவும் கற்றுக்கொண்டார்.

மூன்று தடவைகள் சில்லாலைப் பங்கின் பங்குத்தந்தையாக இருந்த அவர் சில்லாலை மக்களால் மிகவும் போற்றப்படுகின்றார். அதுமட்டுமன்றி வவுனியா இறைம்பைக்குளம்,நெடுந்தீவு, ஆனைக்கோட்டை, இளவாலை எனப் பல பங்குகளிலும் பணியாற்றி இறுதியில் கொழும்புத்துறை அமல உற்பவத்தில் தனது ஓய்வுக் காலத்தினை ஆன்மீகத்தில் செலவிட்டு 25.11.1979 ஆம் ஆண்டு இறைவனடி சேர்ந்தார் அவரது உடல் யாழ் மரியன்னை சேமக்காலையிலேயே புதைக்கப்பட்டது. இவ்வாறு பெல்ஜியத்தில பிறந்தாலும் தனது குருத்துவக்காலம் முழுவதையும் இலங்கையில் செலவிட்ட அருட்தந்தை டெய்சி அவர்களின் பணி போற்றுதற்குரியதாகும்.

இவர் ஏழ்மை, எளிமை, உண்மை மிக்க பணியாளராகவும் ஏழைகள் மட்டில் அன்புமிகுந்தவராகவும் விளங்கியுள்ளார். இவர் பணியாற்றிய பணித்தளங்கள் மிகவும் கடினமானவையாக இருந்த போதும் மக்களுடன் உடனிருந்து, இணைந்து கடுமையாக உழைத்து அர்ப்பணிப்புடன் பணியாற்றினார். ஏழையிலும் ஏழையாக தான் வாழ்ந்தது மட்டுமன்றி தன்னிடமிருந்த அனைத்தையும் ஏழைகளுக்குப் பகிர்வதில் இன்பங் காண்பவராக இருந்துள்ளார். அதனால் இவரது ஓய்வுக்காலத்தில் பலமக்கள் அவரை சந்தித்து ஆறுதல் பெற்றது மட்டுமன்றி இவரது இறப்பின் போது பல நூற்றுக் கணக்கான மக்கள் கண்ணீருடன் இவரை வழியனுப்பியதாகக் குறிப்பிடுவர்.

### கலை இலக்கியப் படைப்பாளி

அருட்தந்தை டெய்சி அவர்கள் பன்முக ஆற்றல் கொண்டவர். மிகச்சிறந்த கலைஞர் சிறுகதை, நாவல், நாடகம் போன்ற இலக்கியங்களைப் படைத்தது மட்டுமன்றி சிறப்பான மறை உரைஞராகவும் விளங்கினார். அத்துடன் சிறந்த கட்டடக் கலைஞராகவும் விளங்கினார். இவரிடம் இருந்த பிரஞ்ச், ஆங்கிலம், லத்தீன், டச், தமிழ் போன்ற பல மொழி ஆற்றல் இவரது படைப்புக்களில் செல்வாக்குச் செலுத்தியது.

### கட்டக்கலைஞன்

இவர் சிறந்த கட்டக்கலைஞனாக விளங்கியது மட்டுமன்றித் தான் பணி செய்த பெரும்பாலான இடங்களில் தனது நினைவுச்சின்னங்களாக பல கட்டங்களை விட்டுச் சென்றுள்ளார். சில்லாலை 'புனித கதிரைமாதா' ஆலயம் இவரது கட்டக்கலையின் ஆளுமைக்கு சிகரம் வைத்ததுபோன்ற அமைப்பினைக் கொண்டு விளங்குகின்றது. தூண்கள் இல்லாது ஏழு வில் வடிவ தாங்கிகளுடன் கட்டப்பட்டுள்ள இவ்வாலயத்தின் கலை நுட்பமானது ஆச்சிரியமும் சிறப்பும்மிக்கது. அதே நுட்பத்தினை அவர் நாவாந்துறை பரலோக மாதா ஆலயத்திலும் கையாண்டுள்ளார். அதுமட்டுமன்றி சில்லாலையில் உள்ள பாடசாலை, கன்னியர் மடம் என்பவையும் அவரால் கட்டப்பட்டவை சில்லாலை சந்தியோகுமையோர் ஆலயத்துக்கான அடிப்படையான பணிகளையும் இவரே ஆரம்பித்தார்.

கட்டடங்களைக் கட்டும்போது பங்கு மக்களை சிரமதானப் பணிகள் மூலமாக இணைத்து செயற்பாடுகளைச் சாத்தியப்படுத்தினார். அதுமட்டுமன்றி அவரது 'மரணித்தவள் மகள்' என்ற சிறுகதைத் தொகுப்பினை வெளியிட்டபோது அந்நூலில் விற்று வரும் வருமானத்தில் அரைவாசிப்பகுதி கதிரைமாதா ஆலய கட்டடப்பணிகளுக்கும், அரைவாசிப்பகுதி சந்தியோகுமையோர் ஆலய கட்டிடப் பணிகளுகளுக்கும் செலவளிக்கப்படுமென நூலில் குறிப்பிட்டுள்ளார். அவ்வாறான பல்வேறு முயற்சிகளுக்கூடாக பல்வேறு கட்டங்களை ஆக்கிய இவரின கட்டகலை ஆர்வம் ஆளுமையும் காலத்தால் மறக்ககூடியதல்ல.

### இலக்கியப் பணிகள்

மொழியாளுமையைச் சிறப்பாக கொண்டிருந்த அருட்தந்தை அவர்கள் தமிழில் நாவல் சிறுகதை, நாடகம் போன்றவற்றை எழுதியுள்ளார். 'பிரசங்கியாத பிரசங்கம்', தனியே நாவலாகவும், 'தனிநாயகம்', 'நானே குற்றவாளி' என்பவை தனித்தனி நாடக நூல்களாகவும், வெளியிடப்பட்டிருப்பதுடன் 'மரணித்தவள் மகள்' என்ற நூற் தொகுப்பில் 'மரணித்தவள் மகள்' 'போலி மோதிரம்', 'போலிப்பிசாசு' ஆகிய சிறுகதைகளும், 'அருளும் கறுப்பனும்' என்ற குறுநாடகமும் இணைக்கப்பட்டுள்ளன.

### நாவல்

இவர் எழுதிய குறு நாவலாக 'பிரசங்கியாத பிரசங்கம்' காணப்படுகின்றது. ஞானப்பிரகாசம் எனப்படும் குருவானவர் கூலைத்தீவு என்னும் கிராமத்தில் ஏழு ஆண்டுகளாக வேதபரிபாலனம் செய்கின்றார். தான் பரிபாலனம் செய்த கிராமத்தில் இருந்து இறந்தவர்கள் முடிவில்லா வாழ்வில் எங்கு இருப்பார்கள் என்பதனை அறியும் அவா இவரில் அடிக்கடி ஏற்பட அவரது தியானத்தில் அவர் மேலுலகம் சென்று திரும்புகின்றார். அது அவரில் பாரிய அதிர்ச்சியை ஏற்படுத்த அவர் பதட்டத்துடன் தான் கண்டவற்றை எழுதி வைத்து விட்டு இறந்து விடுகின்றார். அவர் எழுதியதில் இருந்து அவர் மோட்சம், உத்தரிப்புஸ்தலம், நரகம் ஆகியவற்றிற்கு பயணஞ் செல்வதாகவும் அங்கு அவை எவ்வாறு இருந்தன என்பதனையும் அவரது பங்கினைச் சேர்ந்த யார் யார் இருக்கின்றார்கள், எனவும் அறிந்து கொள்ளுகின்றார். இருவர் மட்டுமே மோட்சத்திலும், ஓரிருவர் உத்தரிப்புஸ்தலத்திலும், பலர் நரகத்திலும் இருப்பதனை கண்டு மன வேதனை அடைகின்றார். அவர்காணும் ஒவ்வொருவரும் வாழும் போது செய்த நன்மை தீமையான சம்பவங்கள் குருவானவரின் மனக்கண்முன் வந்து போகின்றன. கற்புநெறிப்பிறழ்வு, பொருளாசை, சாதிப்பாகுபாடு, களவு, நாஸ்திககொள்கைகள், பிறசிநேகமற்றதன்மைகள், ஊதாரித்தனம், தற்பெருமை, அரசியல் மோசடி போன்ற பலவும் பலரை நரகத்தில் வீழ்த்தியுள்ளதனை அவரரவர் வாழ்வினூடாக ஆசிரியர் நாவல் மூலமாக இனங்காட்டுகின்றார். 'தங்கமணி' என்பதும் இவர் எழுதிய நாவலாக கருதப்பட்டாலும் அது பார்ப்பதற்குக் கிடைத்தில.

### சிறுகதைகள்

இவர் எழுதிய சிறுகதைகளில் 'மரித்தவள் மகள்', 'போலி மோதிரம்', 'போலிப்பிசாசு' போன்றவை குறிப்பிடத்தக்கவை. இச் சிறுகதைகள் நேரடியான கிறிஸ்தவ கதைப்பொருளை கொண்டவையாக இல்லாது நகைச்சுவை ததும்ப பல்வேறு அறக் கருத்துக்களை கூறுவனவாக அமைந்துள்ளன. **'மரித்தவள் மகள்'** சிறு கதையில் இறந்தவளாக கருதி புதைக்கப்பட்ட ஒரு பெண் உண்மையில் இறக்காது சவக்காலையில் இருந்து மீண்டு வருவதும் கணவன் மனைவிக்கிடையேயான உண்மைஅன்பைவலியுறுத்துவதும் கதையாக அமைகின்றது. **'போலி மோதிரம்'** ஒரு செல்வந்தப் பெண்ணிடம் பணியாற்றும் கண்மணி என்னும் பெண் அவரது விலைமதிப்பற்ற மோதிரத்தினை திருடுவதற்கு எடுக்கும் முயற்சி அம்பலமாவதை அடிப்படைக் கதையாக கொண்டு அளவுக்கு மீறி ஆசை கொள்ளக்கூடாது என்ற கருப்பொருளுடன் படைக்கப்பட்டுள்ளது. **'போலிப்பிசாசு'** என்ற சிறுகதையானது சிங்கராஜா என்ற ஆசிரியர் இறை நம்பிக்கையும் பேய்பிசாசகளில் அச்சமும் இல்லாதவர். அவரை பயப்படுத்துவதற்கு மாணவர்கள் செய்யும் ஏமாற்று நாடகத்தினை... (தொடர்ச்சி 11ம் பக்.)

காவலூர் யோவான்

## காவலன் கலசம்

# அவள் திருப்பித் தந்த பேனாக்கள்...

அருட்பணி எஸ்.அஜந்தன்

யாழ்ப்பாணத்தில் சண்டை தொடங்கி விட்டது. செல்லடி, குண்டுச் சத்தங்கள் கிட்டக் கிட்டக் கேட்கிறது. இராணுவம் முன்னேறி வருகிறது. எல்லோரும் வன்னிக்குப் புறப்படுங்கோ! "இடப்பெயர்வு".

கையில் அகப்பட்டதைக் கட்டிக் கொண்டு படலையை இழுத்திச் சாத்தி வீட்டை, முற்றத்தை, தென்னைகளை, செவ்வரத்தம் பூக்கன்றுகளை, ஊஞ்சல் தனியே கிடந்த கிடந்து ஆடும், முற்றத்து மாமரத்தைத் திரும்பிப் பார்த்த கணங்களில் புரிந்திருக்கும், வீடு என்பது வெறுமனே வீடு அல்ல. அது பிரிந்துபோக முடியாத நினைவுகளின் தொட்டில். அதுவும் ஒரு கோயில்.

உரலில் மாவிடித்தபடியும், தேங்காய் உரித்தபடியும், இடுப்பில் இருத்திக் குழந்தைக்குச் சோறூட்டிய படியும் நின்ற நின்ற ஆடைகளோடு அவசர அவசரமாகப் புறப்பட்டு, தூறிக்கொண்டிருக்கும் மழையில் நனைந்தபடி குன்றும் குழியுமாக வெள்ளம் தேங்கி நின்ற A-9 வீதிகளில் மக்கள் வெள்ளம் நகர்கிறது. ஈரமாய்... ஈரமாய்... பாரமாய்... நாவற்குழியைத் தாண்டியும்...

இதேநேரம் யாழ்ப்பாணம் கொழும்புத்துறைக் கடற்கரைப் பக்கம் ஒரு சம்பவம் நிகழ்கிறது. பெரிய குருமடம். அப்போதைய அதிபர் அருட்பணி S.J. இம்மானுவேல் அடிகளார்.

தம் மந்தைகள் நகர்கின்ற சமவெளிகள் நோக்கி, அவர்களின் கண்ணீர்களின் ஈரம் கைகளில் பிசு பிசுக்க, கூட நடந்து போகிறவர்கள்தானே இறைவனின் பணியாளர்கள்.

அருட்பணியாளர் தன் சிறிய அறையில் புறப்படுவதற்கான ஆயத்தங்களைச் செய்து கொண்டிருக்கிறார். அவர் தனக்கெனச் சேர்த்து வைத்திருந்த பெரும் சொத்துக்களான புத்தகங்களை அடுக்கிக் கொண்டிருக்கின்றார்.

அவருக்கு இரண்டு பெண் புலிப் போராளிகள் உதவி செய்து கொண்டிருந்தனர். இரண்டு மெல்லிய மலர்க்கொடிகள். பத்தொன்பதோ இருபதோ வயதிருக்கலாம். வானவில்லைப்போல ஒரு வடிவான வாழ்கைக்கான அத்தனை சாத்தியங்களும் கொண்டவர்கள். கவிதைகளால் நிறைந்த காதல், கனவுகளால்



வழிந்தொழுகும் திருமணம், பூமியைச் சொர்க்கமாக்கும் குழந்தைகள், குடும்பம், உறவுகள், கொண்டாட்டங்கள் என வாழ்க்கை அள்ளித்தெளிக்கும் அத்தனை ஆசீர்வாதங்களையும் பெறத் தகுதியானவர்கள்.

சுறுசுறுப்பான மெல்லிய காற்றைப் போல இயங்கிக் கொண்டிருந்தார்கள். எடுத்தார்கள், அடுக்கினார்கள், கட்டினார்கள்.

எந்த நகைகளும் அணியாத கழுத்துக்களில், கறுத்த நாடாவில் தொங்கிக் கிடந்தன நஞ்சுக் குப்பிகள். ஜீன்ஸ், சேட் அணிந்து அகலமான கறுத்தப்பட்டி அணிந்திருந்தார்கள். இரட்டைப் பின்னல் பின்னி இரண்டு பக்கமும் மாறிமாறி மடித்துக் கட்டியிருந்தார்கள்.

எல்லாம்கட்டி அடுக்கிவிட்டார்கள். அருட்பணியாளரின் மேசையில் இரண்டு அழகான பளபளப்பான விலையுயர்ந்த வெளிநாட்டுப் பேனாக்கள் இருக்கின்றன. இந்தப் பிள்ளைகளுக்கு ஏதாவது கொடுத்தால் சந்தோசப்படுவார்களே என எண்ணிய அருட்தந்தை அந்தப் பேனாக்களை எடுத்து ஆளுக்கொன்றாகக் கையில் கொடுத்தார்.

கையில் வாங்கியபடி சிரித்தார்கள். அவ்வளவு அழகான சிரிப்பு. வாங்கிய போனாக்களை அருட்தந்தையை நோக்கி நீட்டினார்கள்.

"பாதர்! இதை நீங்களே வச்சிருந்து யாராவது படிக்கிற பிள்ளைகளுக்குக் குடுங்கோ. நாங்கள் இண்டைக்கோ இல்லாட்டி நாளைக்கோ வீரச்சாவடைஞ்சிடுவம். இது வேறு யாருக்காவது உதவும் பாதர்". அருட்தந்தையின் தொண்டைக்குள் ஏதோ வந்து அடைத்தது.

ஒரு பேனாவோடுகூடத் தம்மை அடையாளப்படுத்திக்கொள்ள விரும்பாதவர்கள். அதையும் யாரோ ஒருவருக்காக இழந்துவிடத் தயாராக இருக்கிற ஒரு மனதை, தியாகத்தை, தாய்மையை என்ன பெயரால் அழைப்பது.

ஒரு புயலைப்போல எல்லாவற்றையும் வழித்துத் துடைத்து அழித்துவிட்ட போர், அதோ இன்னமும் எம் கோப்பையில் மனிதத்தைக் கொஞ்சம் மிச்சம் வைத்திருக்கிறது. எடுத்துப் பந்தி வையுங்கள். அது அட்சய பாத்திரம். தீர்ந்து போவதேயில்லை.

அந்தப் பளபளப்பான பேனாக்கள் எங்கள் கைகளில் தரப்பட்டுக் கொண்டேயிருக்கின்றன. எழுதுங்கள், மையிட்டு நிரப்பி அடுத்த தலைமுறையின் கைகளில் கொடுத்து விட்டுப் போங்கள். தாயகக் கனவுகள் சுமந்த மானிடத் தாகங்கள் மரணிக்கவே இல்லை.

எந்தத் துயிலும் இல்லத்தில் கல்லறைக் கல்லாகினார்களோ? அந்த இரண்டு பேனாக்காறிகளும்...

நான் நினைக்கிறேன், யாரோ ஓர் பாசக்கார அண்ணனுக்கு சண்டைத் தோழியாகவோ, யாரோ ஓர் தம்பிக்கு செல்ல அக்காவாகவோ இருந்தவர்கள் தானே இவர்களும்...

# “தாகமாயிருக்கிறது” (யோவா 19:28)

அருட்பணி.C.J.அன்ரனிபாலா

வேதனையுறும் நிலையில் இறைவனின் நீதியின் பொருட்டுப் பாவப் பரிகாரம் செய்து கொண்டிருக்கும் ஆன்மாக்களுக்காக அதாவது இறப்பின் மூலம் இவ்வுலகம் கடந்த ஆன்மாக்களுக்காக மன்றாடுகின்ற சிறப்பான மாதமாகக் கார்த்திகை மாதத்தைக் கத்தோலிக்க திருஅவை எமக்குத் தந்திருக்கின்றது. தந்தை தன்னிடம் ஒப்படைத்தவர்களுள் எவரும் அழிவுறக்கூடாது என்பதே இயேசுவின் சிலுவையின் தாகத்திற்குக் காரணமாகும்.



மேலும் இந்த உலகின் பிரபஞ்சம் முழுவதையும் படைப்புகள் அனைத்தையும் மனிதர்கள் அனைவரையும் கழுவித் தூய்மைப்படுத்தக் கல்வாரி மலையில் தான் சிந்திய தூய இரத்தத்தின் பலன் வீணாகிப் போய்விடக்கூடாது என்பதே "என் இறைவா, என் இறைவா, ஏன் என்னைக் கைவிட்டீர்"(மத் 27:46) என்னும் ஏக்கப் பெருமூச்சாகும்.

இவ்வுலகைக் கடந்த பிற்பாடு தமது பாவங்களுக்காக வேதனையுறுகின்ற உத்தரிப்பு ஸ்தலம் என்று அழைக்கப்படும் நிலை ஓர் குறிப்பிட்ட இடமல்ல. மாறாக இந்த வேதனையுறும் நிலையில் உள்ள ஆன்மாக்கள் இவ்வுலகில் எம் மத்தியில் எமது வீட்டின் அறைகளுக்குள்ளே, எமது தெருக்களிலே எமது வேலைத் தளங்களிலேதான் எம்மோடு இணைந்து வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். நாம் உயிருடன், ஆன்மாவோடு வாழ்கின்ற இந்த உலகை, அவர்கள் இறந்து கடந்த பின்பும் இன்றுவரை இறைவனைத் தம்மால் கண்டு களிக்க முடியவில்லையே என்னும் ஏக்கப் பெருமூச்சாகிய தணியாத நெருப்பில் துன்புறுகின்றார்கள்.

இறைவனின் அமைதி கிடைக்கும் போது மட்டும் அவர்கள் எம்மிடம் வந்து செப உதவியைக் கேட்கின்றனர். புனித பியோ அடிகள், புனித மரிய பவுஸ்தீனா போன்ற பல்வேறு புனிதர்களிடம் பல ஆன்மாக்கள் நேரில் வந்து (காட்சியோ, கனவோ அல்ல) செப உதவியைக் கேட்டிருக்கின்றார்கள். பின்பு பல வருடங்களின் பின்பு வந்து நன்றிகூறி விட்டு, உங்களுக்காக விண்ணகத்திலிருந்து மன்றாடுவோம் என்று கூறி மகிழ்வுடன் விண்ணகம் சென்றிருக்கின்றார்கள்.

நாம் பல வருடங்கள் ஏராளமான திருப்பலிகள் ஒப்புக் கொடுத்துத் தான தருமங்கள், பரித்தியாகங்கள் செய்தாலும் ஒரு ஆன்மாவைக்கூட மீட்க முடியாது. அதேவேளை சில வேளைகளில் ஒரு திருப்பலியுடனும் ஒரு ஆன்மா மீட்கப்படலாம். இவ்வுலகில் இறை நம்பிக்கையுடன் இறை இரக்கத்திற்காக மன்றாடுபவர்களின் தூய வாழ்வு காரணமாக இறைவன் இதைச் செய்யலாம்.

ஆனால் நரகத்திற்குப் போனவர்கள் குறித்து நாம் கவலை கொண்டும் பயனில்லை. புனித மரிய பவுஸ்தினாவுக்கு இயேசு கூறியது போன்று சாத்தானுடன் எக்காலத்திற்கும் தஞ்சம் என்று, கொடிய சகிக்க முடியாத மணமும், கண்ணாடி போன்ற உடல்களினூடாகக் கொடிய வேதனையுடன் ஊடுருவிச் செல்லும் நெருப்பும் வாட்டியெடுக்க, கேவலமான சொற்களும், தூஷண வார்த்தைகளும், புறக்கணிப்புகளும் அவநம்பிக்கையுடன் கூடிய சாத்தானை மட்டும் எப்போதும் துணையாகக் கொள்ளும் முடிவில்லாத இருப்பே நித்திய நரகமாகும்.

அவர்களின் கதை முடிந்தது.

விண்ணக வாழ்வும் நித்திய நரகமும் உண்டென்று இயேசுவே கூறியிருக்கின்றார். (மத் 25:34-41) இதை நோக்கும் போது வெளிநாடுகளுக்குச் செல்ல முடியாவிட்டாலும், விமானச் சீட்டைப் பதிவு செய்து விட்டு நரகத்திற்குச் செல்லும் விசாவிற்காகப் பலர் இவ்வுலகில் காத்திருக்கின்றனர்.

இயேசுவே கூறியிருக்கும்போது நித்திய வாழ்வை நாம் விண்ணகத்துடன் மட்டும் மட்டுப்படுத்திவிட முடியாது. நித்திய வாழ்வு நரகத்திலும் தான், என்று நம்பக் கூடியதாக இருக்கின்றது. அப்படியாயின் இறைவன் இரக்கமில்லாதவரா? என்று நாம் கேட்கலாம். அவர் இரக்கமுள்ளவர். அவருடைய இரக்கமே அவரின் நீதியுமாகும். அவரது நீதியே உத்தரிப்பு வேதனை நிலை. ஏனெனில் நல்லவரும் கெட்டவரும் ஒன்றாக விண்ணக வாயிலைக் கடக்க முடியாது. ஆகவேதான் இறைவனின் நீதிக்காக பரிகாரத்தின்படி பெரும்பாலான ஆன்மாக்கள் துன்புறும் நிலையில் எம்மருகில் எம்மோடு வாழ்கின்றனர்.

ஆனால் நரகத்தைப் பொறுத்த வரை இறைவன் இவ்வுலகிலேதான் இரக்கமுடையவராக இருக்கின்றார். மறு உலகில் அவர் நீதியின் அரசராகவே இருப்பார். இவ்வுலகில் எம்மையும் அயலார்க்கு இரக்கம் காட்ட தானே இறைவன் ப

இவ்வுலகிலேயே மனக் கடினத்துடன் பல்வேறு துறைகளில், தற்புகழ்ச்சி, தற்பெருமை, சுயநலம், பணம், பட்டம், பதவி வெறி போன்றவற்றுடன் வாழ்பவர்களுக்கு மனம் மாறுவதற்காக ஏராளமான எண்ணிக்கையற்ற இரக்கத்தின் சந்தர்ப்பங்களை வாரி வழங்குகின்றார். அழகிய சுதந்திரம் என்னும் கொடையை மனிதனுக்கு வழங்கிய இறைவன் அவனது சம்மதமும், ஒத்துழைப்பும் இல்லாமல் அவனை மீட்கமாட்டார். அவரால் மீட்க முடியும். ஆயினும் தன்னிச்சையாக மனிதனைப் பொம்மையாகப் பாவித்து மீட்கமாட்டார்.

இவ்வுலகில் மனிதனின் பெரிய பாவம் என்னவென்றால் மோட்சம், நரகம், உத்தரிப்பு நிலை, பாவம் ஆன்மாவின் அழிவு போன்ற விடயங்களைப் பேசாப் பொருளாக்கி இலகுவில் மறந்து விடுவதாகும். மாறாக இவற்றை அன்றாடம் நினைவுபடுத்தி இயேசுவின் சிலுவையின் தாகத்தைத் தணிக்க ஆன்மாக்களின் மீட்புக்காகவும், சிலுவையில் கைவிடப்பட்ட நிலையை உணர்ந்து மனக்கடினமான பாவிகளின் மனமாற்றத்திற்காகவும் முயற்சிப்போம்.

அதாவது திருப்பலிகளிலும் ஏனைய பக்தி முயற்சிகளிலும் பங்குபற்ற முடியவில்லையே என்று ஏங்குகின்றோம். இறை இரக்கம் மற்றும் நீதியின் வெளிப்பாடாக இரும்புத்திரை மற்றும் மூங்கில் திரைகளின் மறைவில் மறைசாட்சியச் சித்திரவதைகளை அரங்கேற்றுகின்ற கொம்யூனிச மற்றும் ஆபிரிக்க, அராபிய நாடுகளில் மட்டுமல்ல, ஒரே இறைவனை ஆராதிக்கின்றோம் என்று சொல்லிக்கொண்டு துரோக செயல்களை அரங்கேற்றிக்கொண்டிருக்கும் மேலைத்தேச நாடுகளிலும் ஆன்ம சுத்திகரிப்பை கொவிட் - 19 செய்து கொண்டிருக்கின்றது. இதன்மூலம் இறைவனே எம்மை நொறுக்குகின்றார். அவரே குணப்படுத்துவார் (எசாயா 57:17-18) என்று உணர்ந்து எமது ஆன்மாவை நாமே சுத்தமாக்கி, சமூகத்தைத் தூய்மையாக்கி இயேசுவின் சிலுவையின் ஆன்மாக்களுக்காகத் தாகத்தைத் தணித்திட முன் வருவோம்.

# காவலன் கலசம்

### முன்னுரை

இன்று இந்த நாட்டு மக்களின் வாயிலும் மனதிலும் எழும் இரண்டு வார்த்தைகள் ஒன்று கொ-ரோனா இரண்டு 20 ஆவது சட்டத் திருத்தம். இரண்டும் இந்த நாட்டு மக்களுக்குப் பேராபத்து. கொரோனா பற்றிய செய்திகளும் அது பரவுவதைத் தடுக்க அரசும் சுகாதார அமைச்சும் கவனத்தில் கொண்டுள்ளன. அவர்களின் ஆலோசனைகளை மக்கள் நன்றே கடைப்பிடித்தால் கொரோனா பரவுவதை ஓரளவாவது தடுக்கலாம்.

கத்தோலிக்க திருஅவை அரசுடன் ஒத்துழைக்கின்றது. யாழ் குருமுதல்வர் அடிகள் நாம் எங்ஙனம் நடந்து கொள்ளவேண்டுமென்று எங்களுக்குச் செய்தி அனுப்பிக் கொண்டே இருக்கிறார். இவர்களைப் பாராட்ட வேண்டும். இவர்களின் ஆலோசனைகளை நடைமுறைப்படுத்துவது எங்கள் அனை-வரினதும் கடமையும், பொறுப்புமாகும்.

### 20 ஆவது சட்டத் திருத்தம்

இது மிகவும் ஆபத்தானது. இதனை இந்த நாட்டு மக்கள் முழுமை யாகப் புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை.

இந்தச் சட்டத் திருத்தத்தைத் தடுத்தே ஆகவேண்டும். அன்றேல் அனைத்து அதிகாரங்களும் ஒரு தனி மனிதனில் மனுஷியில் குவிந்துவிடும். அவனோ அன்றேல் அவளோ சர்வாதிகாரியாக வழி சமைக்கும். இதன் விளைவுகள் :

1. ஜனாதிபதித் தேர்தலே இனிமேல் நடைபெறாது. அன்றேல் ஒற்றைக் கட்சித் தேர்தலே நடைமுறைக்கு வரும். ஓர் இடி அமீன் (உகண்டாவின் முன்னாள் ஜனாதிபதி அன்றேல் ஒரு முசாபே (ஷிம்பாபேயின் முன்னாள் ஜனாதி-பதி) அன்றேல் ஒரு சதாம்குஷைன் ஒரு புட்டின் போன்ற சர்வாதிகாரிகள் உருவாகுவார்கள். தடுக்க முடியாது.
2. நீதிபதிகளை இந்த சர்வாதிகாரிகளே நியமிப்பர். நீதி என்ற ஒன்று இந்த நாட்டில் செத்துவிடும். பல குற்றங்கள், கொலைகள், மறைக்கப்படும். அதுவும் முப்படையினரினதும் காவல்துறையினரினதும் அடாவடித்தனமும் கொலைகளும் மறைக்கப்படும்.
3. ஊடகச் சுதந்திரம் அடியோடு அழிந்து விடும். இல்லையென்றால் யாராவது அரசை விமர்சித்தால் அவர்கள் முகவரி இன்றிப் போய்விடுவார்கள்.
4. மனித உரிமைக்காகக் குரல் கொடுக்கும் இயக்கங்கள் அழிக்கப்படும்.
5. காணாமல் ஆக்கப்பட்டோருக்காகத் தொடர்ந்து குரல் கொடுத்து வருவோரே காணாமல் ஆக்கப்படுவார்கள்.
6. இராஜபக்ச குடும்ப ஆட்சி வெகுகாலத்துக்குப் பதவியில் இருக்கும். முன்னர் இருந்த மன்னர் ஆட்சிபோன்று இராஜபக்ச குடும்பமே தலைமுறை தலைமுறையாக இந்த நாட்டை ஆட்சி செய்வார்கள்.

எதிர்ப்பதற்கு எதிர்க்கட்சி இருக்காது. பௌத்த சிங்கள கோஷத்தைத் தொடர்ச்சியாக எழுப்பி, முக்கியமான பௌத்த குருக்களுக்குப் பல சலுகைகளைக் கொடுத்து, அவர்களுடைய துணையுடன் இந்த நாட்டில் உள்ள அனைத்து சிறுபான்மையினரும் அழிக்கப்படுவார்கள். முதலில் தமிழர் பின்பு இஸ்லாமியர், இறுதியாகக் கிறிஸ்தவர்கள். இது கற்பனையல்ல. பல நாடுகளில் நடந்த, நடைபெற்று வருகின்ற சர்வாதிகார ஆட்சிகளின் செயற்பாடுகளின் அடிப்படையில் எழுதுகிறேன்.

ஜனநாயக நாடு என்று சொல்லிச் சொல்லிக் கொண்டு பல கொலைகளைச் செய்த அவற்றை இன்றுவரை மூடி மறைத்த மகிந்தவின் ஆட்சியைப் பார்க்க விரும்பாத வரிகளைத் தவிர, மல்கம் உட்பட ஏனையோர் நின்று பார்க்கிறார்கள். அவற்றிற்குக் குரல் கொடுக்க முடியாதவர்களாக இந்த நாட்டு மக்கள் மதத் தலைவர்கள் மௌனித்து விட்டனர். இதே மகிந்த தான் இன்று சொல்லுகின்றார் "எந்த எதிர்ப்பு வந்தாலும் 20 ஆவது சட்டத்தை மாற்றி அமைப்போம்" இவர்கள் சர்வாதிகாரிகளாக மாறினால் இந்த நாடு இந்த நாட்டு மக்கள் எப்படி ஆவார்கள் என்பதற்குக் கற்பனை தேவையா?




கரவையூர்ச் செல்வம்

### தடைசெய்தே ஆகவேண்டும்

ஆகவே 20 ஆவது சட்டத்திருத்தம் முற்றாகத் தடைசெய்யப்பட வேண்டும். அனைத்து அரசியல் கட்சிகளும் ஒன்று திரண்டு இந்தச் சட்டத்தை அமுலாக்குவதை நிறுத்த வேண்டும். கத்தோலிக்க ஆயர் அவை ஓர் அருமையான எதிர்ப்பை உறுதியாகத் தெரிவித்துள்ளார்கள்.

கத்தோலிக்க ஆயர் அவையினர் அறிக்கையை வரவேற்று, இன வேறுபாடின்றி அனைத்துக் கத்தோலிக்க மக்களும் ஒன்று திரள்வோம். எதிர்ப்போம்.

சில பௌத்த பீடங்களும் இந்தத் தீர்வை எதிர்த்துள்ளன. பாராட்டி வரவேற்கின்றோம். பௌத்த உயர் பீடங்கள் இந்த 20 ஆவது திருத்தத்தினால் இந்த நாட்டு மக்களுக்கு வரக்கூடிய பாரிய தீமைகளை முன்கூட்டியே அவதானித்து, இதை எதிர்க்க வேண்டும். அன்றேல் பௌத்த தர்மத்திற்கே அழிவுதான்.

### வறுமை

சர்வாதிகாரியின் எடுபிடிகள் செல்வந்தர்களாவார்கள். பெரும் பான்மையான நாட்டு மக்கள் வறுமைக் கோட்டின் கீழ் தள்ளப்படுவார்கள். ஷிம்பாவேயில் பார்த்தோம். உகண்டாவில் பார்த்தோம்.

### கனவொன்று நனவானது

இதை எழுதிக்கொண்டிருக்கும் பொழுது இன்னோர் செய்தி செவிக்கு இனிமையானது. வடகிழக்கு ஆயர்களும் அவர்களின் மறைமாவட்டக் குருக்களும் ஒன்றிணைந்து கொரோனாவிற்கு எதிராக அதைத் தடுக்க அழைப்பு விடுத்துள்ளார்கள். மகிழ்வோடு வரவேற்கின்றோம். எங்கள் அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய வடகிழக்கு ஆயர்களே! மறைமாவட்ட முதல்வர்களே! நீங்கள் இடையிடையே ஒன்று கூடவேண்டும். நிச்சயமாக ஒன்றுகூட வேண்டும். இந்தப் புதுமை - ஆம் இது ஒரு புதுமை தொடர வேண்டும்.

வடகிழக்குக் கத்தோலிக்க மக்களிடையே பல கொரோனாக்கள் பல ஆண்டுகளாகத் தொற்று நோயாளர் பதவி. அவர்களைச் சிறிது சிறிதாக அழித்து வருகின்றன. இந்தக் கொரோனாக்களை அடையாளம் காணுங்கள். மருந்தைத் தேடுங்கள். அதை மக்களுக்குக் கொடுங்கள். முகக் கவசம் அணிவதாலோ அன்றேல் சமூக இடைவெளியைப் பேணுவதாலோ இந்தக் கொரோனாக்கள் பரவுவதைத் தடுக்க முடியாது. இந்தக் கொரோனாக்கள் யாழ் கத்தோலிக்க சமயத்திற்கே ஓர் அவ-மானம். யாழ் ஆயர் வ.தியோகுப்பிள்ளை அவர்கள் கண்ட ஒரு கனவை நீங்கள் இன்று நனவாக்கி உள்ளீர்கள்.

வடகிழக்கு ஆயர்கள் ஒன்று சேர வேண்டுமென்று அவர் வெகுவாக விரும்பினார். இது எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரியும். போரைக் கூட்டாக வைத்து அந்த ஒன்றுகூடல் தடுக்கப்பட்டது. அங்கு அரசியலும் இருந்தது. ஆயர்களின் தயக்கமும் இருந்தது.

### ஏற்றுமதி

கொழும்பு மறைமாவட்டத்தில் தான் ஆயர்கள் உருவாக்கப்பட்டு, பின்னர் ஏனைய மறைமாவட்டங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறார்கள் என்று பல குருக்கள் பேசிக் கொள்கிறார்கள்.

இன்னொரு மறைமாவட்டத்தில் இருந்து ஓர் ஆயர் வேறோர் மறைமாவட்டத்திற்கு அனுப்பக்கூடா என்பது கிஞ்சித்தும் எனதுவாதமல்ல. ஆனால் நடைமுறையில் இருப்பது ஆரோக்கியமானதல்ல.

கண்டி மறைமாவட்டத்திற்கு ஒரு தமிழ் பேசும் குரவரை ஆயராக நியமிக்கக்கூடாது என்று ஒரு 'துவேசத்தை" காற்றில் கலந்து விட்டார்கள்! நான் சிறுவனாக இருந்தபொழுது ஆயர் நியமனம் தூய ஆவியினால் தெரியப்படுகின்றது என்று சொன்னார்கள். நானும் அதை நம்பினேன். அது வேறு கதை. இன்று ஆயரை நியமிப்பது மகாநாயக்கர்கள் என்பது புதிய கதை.

ஈழக் கத்தோலிக்க மதத்தில் இனத் துவேசம் உண்டென்பது மறைக்கவோ அன்றேல் மறுக்கவோ முடியாத உண்மை. இந்த நிலைப்பாடு கிறிஸ்துவுக்கு எவ்வகையிலும் சாட்சியம் கூறுவதாக அமையாது. இந்த நிலை மாற வேண்டும்.

### ஆன்மீகம் தான் பதில்

'அனைவரும் உடன் பிறந்தோர்' என்ற நோக்கில் இந்நாட்டு மக்கள் அனைவரையுமே ஒன்று சேர இணைக்க அடித்தளம் ஆன்மீகம் ஒன்றே. மதங்களை மேவிய (மறுத்து என்று படிக்காதீர்கள்) ஓர் ஆன்மீகத்தில் ஒன்றிணைய முடியும்.

இந்த நாட்டில் உள்ள மதங்கள் அனைத்திலும் ஞானம் (Wisdom) உண்டு. ஞானிகள் இருந்திருக்கிறார்கள். இப்பொழுது இருக்கிறார்களோ தெரியவில்லை. மத நிறுவனங்களை வளர்ப்போர் ஞானி கள் வளர்வதை விரும்பமாட்டார்கள். ஆனால் ஞா-னிகளும், அவர்களது ஞானமும் அவர்களது ஆன்மீகமும் தான் 'அனை-வரும் உடன் பிறந்தோர்" என்ற உணர்வை ஆழப்படுத்தி வளர்க்கும். எனது நீண்ட காலச் சிந்தனையிலும், தேடலிலும் இந்த உண்மை ஆழமாகவும் உறுதியாகவும் என்னில் வேரூன்றி விட்டது.

## தனிமைப்படுத்தலும் தனித்திருத்தலும்



ஆத்துமாவின் ஆணிவேர் தனிமை. தனித்துவத்தை வளர்க்கும் தனிமை. ஆயிரம் பேர் அமர்ந்திருந்தாலும் தனித்திருந்து தனித்துவத்தைக் காட்டு என்பர் பெரியோர். தனிமை சக்தி கொடுக்கும். ஞானம் கொடுக்கும். தன்னை உணர்த்தும். அச்சம் அகற்றும், ஆத்துமாவைத் திறக்கும்.

இத்தனிமை நம்மைத் தனியே விடாது. இயேசுவும் தனித்திருந்தார். தந்தையோடு நாமும் தனித்திருப்போம். இயேசுவோடு உள்ளம் உணர்ந்தும் உண்மைகளை உணர்ந்து கேட்கத் தனித்திருப்போம்.

உள்ளொளி கொடுக்கும் சக்தியினை உவந்து பெறத் தனித்திருப்போம். இன்று தேசிய அளவில் தனிமையை உணரும் நாள்.

**தாகூரின் தனிமை கீதாஞ்சலியைத் தந்தது!**
**காந்தியின் தனிமை அகிம்சை வழியில் சுதந்திரம் தந்தது!**
**புத்தரின் தனிமை ஞான ஒளியைத் தந்தது!**

தனித்திருப்போம்,
தன் நிலை உணர்வோம்,
தனித்திருப்போம் இறை வழி காண்போம்.

## காவலன் கலசம்

# இன்றைய உலகிற்கு செபமாலை அவசியம்



ஒக்டோபர் மாதம் செபமாலை மாதாவின் மாதம். இந்த மாதத்திலே அதிகமான செபமாலைகள் செபிக்க வேண்டும். அதன் பலன்களை மக்கள் பெறவேண்டும் என்று எல்லாக் கத்தோலிக்க கிறிஸ்தவ நாடுகளிலும் மிகவும் முயற்சி எடுத்து செபமாலையைச் செபிக்கின்றார்கள். செமாலை செபமானது தன்னுள்ளே இறைத்திட்டம் அனைத்தையும் இறைமீட்பு வரலாறு முழுவதையும் மரியன்னையோடு சேர்ந்து யேசுவின் திருமுகத்தை அன்பொழுகப்பார்த்து மகிழும் உன்னத நிலையையும் தன்னுள் கொண்டுள்ளது. எனவே செபமாலை செபிப்பது என்பது இறைவனுடைய அருளை நிறைவாகத் தருகின்ற ஒரு செபமாகும்.

தற்காலத்தில் நாம் பாவிப்பது போன்று செபமாலைக் கற்கள், செபமாலை மணிகள் அடங்கிய செபமாலைச் செபம் ஆரம்பித்த வரலாற்றை அறிந்து கொள்வது நமது ஆன்மீக வாழ்விற்கு உதவியாக இருக்கும். ஆரம்பத்திலிருந்தே கிறிஸ்தவ தியானயோகத் துறவு மடங்களில் 150 சங்கீதங்களைச், (திருப்பாடல்கள்) செபித்தார்கள். ஆனால் அநேகமான பொதுமக்களும் துறவு சகோதரர்களும் அவைகளையெல்லாம் வாசிக்கவோ படிக்கவோ முடியாதவர்களாக இருந்தார்கள். இவர்கள் 150 முறை "விண்ணுலகில் இருக்கின்ற எங்கள் தந்தையே " என்ற செபத்தைத் திருப்பாடல்களுக்குப் பதிலாக செபித்து வந்தனர். இதன் சரியான எண்ணிக்கையைக் கணிப்பதற்காக சிறிய கயிற்றில் முடிச்சுக்கள் போட்டு அவைகளைப் பாவித்தனர். இந்தப் பாவனையை கி.பி 3ம் நூற்றாண்டிலும் 4ம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்திலும் வாழ்ந்த வனத்துறவிகளின் வாழ்க்கை முறையில் காண்கிறோம். புனித மரியாவின் செபங்களின் வளர்ச்சி கி.பி 431ம் ஆண்டில் நடைபெற்ற எபேசு பொதுச்சங்கத்திற்குப் பின் படிப்படியாக முன்னேறி வரலாற்றின் மத்தியகாலத்தை அடைந்தது.

சில கத்தோலிக்க பாரம்பரிய மரபுகளின் படி ஒரு காட்சியில் பிரான்ஸ் நாட்டில் மாதா புனித டோமினிக்குக்குத் தோன்றிச் செபமாலையைக் கொடுத்து இந்த செபத்தைப் பரப்பும்படி கேட்டார். புனித டொமினிக் 1170ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 8ம் தேதி ஸ்பெயின் நாட்டில் பிறந்தார். அவர் நற்பணியாற்றி 1221ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 6ம் திகதி இத்தாலி நாட்டில் இறந்தார். இவர் டோமினிக்கன் துறவுசபையை நிறுவியவராவார். அவரது திருநாள் ஆகஸ்ட் மாதம் 8ம் திகதி கொண்டாடப்படுகிறது. இந்தக் காலத்தில் 153 மணிச்செபத்தில் "அருள் மிகப்பெற்ற மரியே வாழ்க.." என்ற செபம் செபிக்கப்படுகிறது.

பின்பு செபமாலைப் பக்தியானது அருளாளர் அலன் டே றோச் என்பவரால் பரப்பப்பட்டது. (1428-1445) இவர் ரோமன் கத்தோலிக்க இறையியலாளரும் திருஅவையில் பல செபமுறைகளைக் கொண்டுவந்தவருமாவார். கத்தோலிக்க மக்கள், செபமாலைப் பக்தியானது இந்தப் புனிதர்களால் பரப்பப்பட்டதாக ஏற்றுக்கொள்கின்றனர்.

வரலாற்று ஆசிரியர்கள் சிலர் செபமாலைப் பக்தியானது படிப்படியாக திருச்சபையின் வரலாற்றில் வளர்ந்து வந்ததாக நோக்குகின்றனர். செபமாலையில் மாதாவின் செபம் திரும்பத் திரும்பச் செபித்து செபமாலைக் கற்களின் வழியாக எண்ணிச் செபிக்கின்ற முறை நவீன காலத்தில் உருவாகியது. "அருள் மிகப் பெற்ற மரியே வாழ்க.." என்று செபிக்கின்ற செபத்தில் தியானத்தை மேற்கொள்ளும் முறையை புனித றூசிய நகரின் டோமினிக் (1458) என்பவரால் கொண்டுவரப்பட்டதாகக் கருதப்படுகிறது. இவர் கர்த்துாசியன் தியானயோக துறவுசபையின் ஒரு தியானயோகக் குருவாவார்.

ஆயினும் இறையிலாளர் அந்திரியாஸ் கெயின்ஸ் என்பவர் செபமாலைச் செபமானது 1300ம் ஆண்டுகளில் கிறிஸ்துவை மையமாகக் கொண்டிருந்ததாகக் கூறுகின்றார். இன்றைய முறையின் ஆரம்பமானது இப்போது குறிப்பிடப்பட்ட காலத்துக்குரியது என்று கணிக்கப்படுகிறது.

1569 ம் ஆண்டு திருத்தந்தை 5ம் பத்திநாதரால் "செபமாலை" என்னும் சிறப்புமடல் வழியாக கத்தோலிக்க திருச்சபையில் செபமாலை நிறுவப்பட்டது.

1571 ம் ஆண்டு "லெபெந்தோ" என்ற இடத்தில் கிறிஸ்தவர்களை எதிர்த்துவந்த முஸ்லீம் படையினரை திருத்தந்தை 5ம் பத்திநாதர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க ஐரோப்பிய கிறிஸ்தவப் படையினர் செபமாலை செபித்து ஒக்டோபர் மாதம் 7ம் திகதி அதன் வல்லமையினால் வெற்றி பெற்றனர். இதன் வழியாக செபமாலை அன்னையின் திருவிழா ஒக்டோபர் மாதம் 7ம் திகதி ஏற்படுத்தப்பட்டது.

2002ம் ஆண்டில் இன்றைய புனிதரும் அன்றைய திருத்தந்தையுமான 2ம் யோண்போல் அவர்கள் "ஒளியின் மறைபொருள்" என்று ஐந்துமறை பொருட்களை அதாவது காரணிக்கங்களை தமது திருத்தந்தைப் பணியின் ஆட்சிக்காலத்தில் அறிமுகப்படுத்தினர்.

இதை ஏற்கனவே 1957ம் ஆண்டில் புனித ஜோர்ஜ் பிறெக்கா அவர்கள் தயாரித்திருந்தார். அவர் பெரியவர்களுக்கும் சிறுவர்களுக்கும் மறைக்கல்வி போதிக்கும் பணிக்கென " கிறிஸ்தவ விசுவாச சத்தியங்கள்" என்று ஒரு சபையையும், மேலும் புனித பிரான்ஸிஸ்கு சபையின் 3வது சபையையும் பொதுமக்களுக்காக நிறுவியவர். இந்த மக்களுக்கு இவர் ஒளியின் மறைபொருட்களை அவர்கள் தியானித்து செபமாலை செபிக்கக் கொடுத்திருந்தார். இதை அடிப்படையாக வைத்து புனித 2ம் ஜோண் பவுல் திருத்தந்தை அவர்கள் ஒளியின் மறைபொருட்கள் அடங்கிய செபமாலைத் தியானத்தை தமது ஆட்சியின் காலத்தில் திருச்சபைக்குக் கொடுத்தார்.

இவ்வாறு செபமாலைப் பக்தியானது கத்தோலிக்க மக்களால் சிறப்பாகச் செபிக்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு திருத்தந்தையும் செபமாலையை நாளாந்தம் செபிப்பதோடு திருச்சபை முழுவதற்கும் இந்த செபத்தின் வல்லமையை எப்போதும் எடுத்துரைக்கின்றனர். நமது இன்றைய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் செபமாலை செபிப்பதன் முக்கியத்துவத்தை அதிகமாக எடுத்துரைப்பதோடு இந்த 2020ம் ஆண்டு "மே" மாதத்தில் விசுவாசிகளுக்கு செபமாலை செபிப்பதன் அவசியம் பற்றி ஒரு திருமடலை வெளியிட்டுள்ளார். அதில் அவர் "வீடுகளில் செபமாலை செபிப்பதன் அழகையும் பலன்களையும் மீண்டும் அனுபவிப்பதற்கு அனைவரையும் நான் சிறப்பாக ஊக்குவித்து உற்சாகப்படுத்துகிறேன் இதை நீங்கள் தனியாகவும் குழுக்களாகவும் செபிக்கலாம். யேசுவின் திருமுகத்தை மரியாவின் அமல இதயத்துடன் ஆழமாகத் தியானிப்பது நம்மை ஒரு ஆன்மீக ஞானக் குடும்பமாக ஒன்றித்து தற்கால சோதனைகளில் இருந்து வெற்றிபெற உதவுகிறது. நான் உங்கள் எல்லோரையும் எனது செபத்தில் நினைவுகூர்ந்து மன்றாடுகிறேன். எனக்காகவும் உங்கள் நாளாந்த செபங்களில் வேண்டிக் கொள்ளுங்கள்" என்று மடலில் குறிப்பிட்டுள்ளார்.




எனவே செபமாலையை செபிப்பது இன்றைய துன்பங்கள் அனைத்திலிருந்தும் விடுதலை அடைய திருச்சபையினால் வலியுறுத்தப்படுகிறது.

**அருட்பணி அ.ம.ஸ்ரீபன் செ.தா**

## தினமும் குடும்பச் செபமாலை செபிப்போம்

குடும்பச் செபமாலை குடும்பத்தில் சமாதானத்தையும், பரிசுத்த தனத்தையும் காப்பாற்றுவதற்கு குடும்பத்தினர் ஒன்று சேர்ந்து ஒவ்வொரு நாளும் செபமாலை சொல்லும் வழக்கம் போற்றற்குரியது. அச்சமயத்தில் கிறிஸ்துவே குடும்பத்தோடு சேர்ந்து செபிக்கிறார் என்று சொல்லலாம். தனிப்படச் சொல்லுவதை விட இக்கூட்டுச் செபத்தில் எவ்வளவோ பலன்கள் கிடைக்கின்றன. "என் நாமத்தினால் இரண்டு அல்லது மூன்று பேர் சேர்ந்திருப்பார்களேயாகில் நான் அங்குள்ளேன்" என்று ஆண்டவர் சொல்லியிருக்கின்றார். தாயும், தந்தையும், பிள்ளைகளும் ஒன்றித்து செபிக்கவேண்டும். அதற்காகச் சரியான நேரத்தைக் குறிக்கவேண்டும். குழந்தைகள் தூங்கப் போகும் சமயம் பின்னிரவிலோ, அலுவலகத்திற்குச் சென்றோர் திரும்பும் முன்போ செபிக்க நேரம் ஒதுக்கவேண்டாம்.

புதிதாய் மணம் செய்த இளம் தம்பதிகள், மணமானவுடனே இப்பழக்கத்தைத் தொடங்க வேண்டும் தவிர்க்க முடியாத காரணங்களால் ஒரிரு நாட்கள் சிலர் செபமாலைக்கு வர முடியாவிட்டாலும், இரண்டு பேராவது சேர்ந்து குடும்பத்தின் பேரால் அன்று செபமாலை சொல்ல வேண்டும். விருந்தாளிகள் வந்திருக்கிறார்கள் என்று செபமாலை சொல்லாமல் விட்டு விடக்கூடாது. குடும்ப செபமாலை விசேடமாய்த் தற்காலத்தில் குடும்பத்தைக் காக்க செபமாலை அன்னை உருவாக்கிய கோட்டை. செபமாலை இராக்கினி ஆட்களையும், குடும்பங்களையும் தேசங்களையும் சாதி சனங்களையும் ஏன் உலகையே காப்பாற்றி வருகிறார்.

இன்று ஒவ்வொரு குடும்பங்களையும் நாடுகளையும் முழு உலகையும் கொரோனா கிருமி எனும் பெரும் ஆபத்து சூழ்ந்திருக்கிறது. குடும்பத்தை அழித்து அதன் வழியாகச் சமுதாயத்தையும் நாடுகளையும் அழிக்க சாத்தான் முனைகின்றான். குடும்பம் காப்பாற்றப்பட்டால் உலகையே காப்பாற்றலாம். அன்பினால் ஒன்றித்து செபிக்கும் செபமாலை உலகைக் காப்பாற்றும். குடுபச் செபமாலையினாலும் செபமாலைத்தாயின் மன்றாட்டினாலும் ஆண்டவரது உள்ளமே கரைக்கிறது. தினமும் செபிப்போம். அன்னையின் பரிந்துரையைப் பெறுவோம்.

இரண்டாம் உலகப் போர் முடிவில் 1945 ஒகஸ்ட் 6 ஆம் திகதி. அணுகுண்டை ஜப்பான் நாட்டின் ஹிரோசிமா நகரில் அமெரிக்கா வீசியது. அதன் விளைவாக சுமார் ஒரு இலட்சம் மக்கள் உயிரிழந்தனர். ஆனால் அப்போது அந்நகரின் மையத்தில், குண்டு வீசப்பட்ட இடத்திற்கு ஒரு கிலோமீட்டர் தொலைவில் அமைந்திருந்த விண்ணேற்பு அன்னை ஆலயமும், அதனோடு இணைந்திருந்த இயேசு சபை இல்லமும் மட்டும் கதிர்வீச்சுத் தாக்குதலில் இருந்து தப்பின. அந்த இல்லத்தில் இருந்த இயேசு சபைக் குருக்கள் அனைவரும் எந்தக் காயமும் இன்றி உயிர் பிழைத்தனர்.

உயிர் தப்பிய குருக்கள், "பத்திமா அன்னையின் செய்தியின்படி வாழ்ந்ததால்தான் நாங்கள் உயிர் பிழைத்தோம் என்று நம்புகிறோம் தினமும் செபமாலை செபிக்கும் வழக்கமே எங்களைக் காப்பாற்றி இருக்கிறது" என்று செபமாலை அன்னைக்குச் சான்று பகர்ந்தனர்.

## காவலன் கலசம்




# என் கேள்விக்கென்ன பதில்!

(மதி, யாழ்ப்பாணம்)
**கேள்வி: நாட்டில் கொவிட் 19 மிக வேகமாகப் பரவி மோசமான பாதிப்புக்களை ஏற்படுத்தும் சூழ்நிலையிலும், நாட்டுத் தலைவரும் அமைச்சர்களும் 20வது திருத்தச்சட்டம் பற்றிப் பேசிக்கொண்டு இருக்கின்றார்களே!?**
**ப:** நாட்டில் கொவிட் 19 வைரஸ், அரசியலில் கொவிட் 20 வைரஸ்! இந்த இரண்டு வைரசுகளும் நாட்டிற்கு மிக மிக ஆபத்தானவையாக இப்போது மாறியிருக்கின்றன! இரண்டையும் வெற்றிகொண்டால் நாடு மீளும், இல்லையென்றால் தாளும்!

*(மகேஸ், யாழ்ப்பாணம்)*
**கே: 20வது திருத்தச்சட்டத்தை எதிர்த்து பௌத்த பீடங்களும் போர்க்கொடி தூக்கியிருக்கின்றன. இலங்கைக் கத்தோலிக்க ஆயர் பேரவையும் தமது அதிருப்தியை வெளியிட்டு இருக்கிறது. பௌத்தமதத் துறவி கள் கொஞ்சம் சிந்தித்துச் செயற்படத் தொடங்கியிருக்கின்றார்கள் என்று கூறலாமா?**
**ப:** அப்ப, இதற்கு முன்னர் அவர்கள் சிந்தித்துச் செயற்படவில்லையா!? சும்மா போங்க மகேஸ்!

*(ஜான்சி, மன்னார்)*
**கே: கொரோனா கொஞ்சம் கொஞ்சமாக் கொன்றுவிடும்போலத்தான் தெரிகின்றது! நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்?**
**ப:** ஜான்சி, கொரோனா என்னிடம் கேட்டுவிட்டா கொல்கின்றது! அது ஒரு புறமிருக்க, மறுபுறம் 'வலியது வாழும்' என்ற தத்துவம் எப்போதும் பொருத்தப்பாடாக இல்லாவிட்டாலும் கொவிட் 19னைப் பொறுத்தவரையில் இத்தத்துவம் பொருத்தமாக இருப்பதாகவே தெரிகின்றது. இதனை ஆக்கிரமிக்க அனுமதித்தால் நாம் எல்லோரும் அல்லோல கல்லோலப்பட வேண்டியதுதான்! ஆகவே, அது நம்மை ஆக்கிரமிப்பதற்கு முன்பாக நாம் அதனை அகற்றிவிடவேண்டும்! அதாவது, இல்லாதொழிக்க வேண்டும். அதற்குநாங்கள்எல்லோரும்சுகாதாரவழி-முறைகளைக் கண்டிப்பாகக் கடைப்பிடிக்க வேண்டும்! நாம் செய்வோமா?

(மதன், மன்னார்)
**கே: மற்றவர்களை வாழ்க்கையில் வீழ்த்துவதிலேயே ஒருசிலர் இன்பம் காண்கின்றார்கள். என்ன செய்யலாம்?**
**ப:** மதன், வாழ்க்கையில் நம்மை வீழ்த்துபவர்களுக்கும் நம்மை வீழ்த்த நினைப்பவர்களுக்கும் நாம் இட்லிமாதிரி வாழ்ந்துகாட்ட வேண்டும்! 'குழிக்குள் தள்ளினாலும் கும்முன்னு வெளியே வரணும்' என்று நான் சொல்லவில்லை. ஓர் ஊரில் இட்லி சுடுகின்ற ஆச்சி சொல்வதாக அறிகின்றேன்.

*(கண்ணன், யாழ்ப்பாணம்)*
**கே: 20ஆவது திருத்தச்சட்டத்தை ஏறக்குறைய பல திறத்தாரும் எதிர்த்துவரும் சூழ்நிலையில் ஆளும் கட்சியிலுள்ள சிலர் 'நிறைவேற்றியே தீருவோம்' என நிற்கின்றார்கள். இவர்கள் இவ்வாறு நிற்பதற்குக் காரணம் என்னவோ?**
**ப:** கண்ணன், நித்தியத்துக்கும் தங்கள் குடும்ப ஆட்சியே நிலைக்கவேண்டும் என்பதுதான் ஆளும் கட்சியிலுள்ள அண்ணன் தம்பிமார்களின் நினைப்பு! நினைப்புத்தானே பலவேளைகளில் பலருடைய பிழைப்பைக் கெடுக்கின்றது! நித்தியமானவன் ஒருவன் இருக்கின்றான்தானே! கடைசியில் அவனாவது சரியானதை நிரூபிப்பான் எனத் திடமாக நம்புகின்றேன்.

**கேள்விகளைக் கேளுங்கள், பதில்களைப் பாருங்கள்!**

*(ஆனந்தன், கிளிநொச்சி)*
**கே: நமது நாடாளுமன்றத்தில் வயோதியர்கள்தான் அதிகமாக இருக்கின்றார்கள்போல தெரிகின்றது! இலங்கை நாடாளுமன்றம் என்ன வயோதியர் இல்லமா?**
**ப:** ஆனந்தன், நீங்கள் கேட்கின்ற கேள்வியின் அர்த்தம் புரிகின்றது. உண்மையில், நாடாளுமன்றத்தில் அங்கம் வகிப்பவர்களுக்கும் வயதெல்லையை நிர்ணயிப்பதுதான் சிறந்தது. அல்லது சிலர் அறளைபேந்தப் பிறகும் நாடாளுமன்றம் சென்று மக்களின் பிரதிநிதிகளாக இருக்கின்ற சூழலே நிலவும்! என்ன செய்யலாம் என்றால், வயதெல்லையை குறித்துவிட்டு அவ்வயதெல்லையைக் கடந்த பிறகும் நாடாளுமன்றம் சென்று மக்கள் பிரதிநிதிகளாக இருக்கவேண்டும் என்று விரும்புகின்றவர்களுக்கு 'சிறுவர் நாடாளுமன்றம்', 'இளையோர் பாராளுமன்றம்' போன்றவற்றை அமைத்துக் கொடுத்திருப்பதுபோல 'முதியோர் நாடாளுமன்றத்தை' அமைத்துக் கொடுத்தால் இந்த முதியவர்கள் இரவுபகலாக இருந்து கதைக்கலாம், விடியவிடிய வேண்டுமென்றாலும் கதைக்கலாம், விடிந்தப்பிறகும் இருந்து கதைத்துக் கொண்டிருக்கலாம்.

*(நேசன், யாழ்ப்பாணம்)*
**கே: சிலருக்கு எவ்வளவுதான் எடுத்துச் சொன்னாலும் விளங்குவது குறைவாக இருக்கின்றது அல்லது விளக்கமே இல்லாமல் இருக்கின்றார்கள். சிலவேளைகளில்விளங்கிக் கொள்ள மறுக்கின்றார்கள் என்ன செய்யலாம்?**
**ப:** நேசன், எல்லாவற்றையும் எல்லோரிடமும் எடுத்துச்சொல்லி விளங்கவைக்கலாம் என எதிர்பார்க்காதீர்கள். சில வேளைகளில் உங்கள் எதிரில் நிற்பது எருமையாகக்கூட இருக்கலாம் என்று ஒருவர் குறிப்பிட்டது இங்கு சரியாக வருகின்றது.

**அருட்பணி செ. அன்புராசா**

*(குமார், யாழ்ப்பாணம்)*
**கே: அதிகாரத்தில் இருக்கும்போது சிலர் கண்மண் தெரியாமல் நடக்கின்றார்கள். அவ்வதிகாரத்தில் இருந்து இறங்கியதும் அப்பாவிகள் போல் நடிக்கின்றார்கள். இவற்றில் எது உண்மை?**
**ப:** இரண்டுமே குமார்.

*(ரவி, கொழும்பு)*
**கே: உண்மையாக இருப்பவர்கள், உண்மையைப் பேசுபவர்கள் இன்றைய சமுதாயத்தில் தோற்றுப் போவதாகவே உணர்கின்றேன். இதுபற்றி நீங்கள் என்ன கருதுகின்றீர்கள்?**
**ப:** ரவி, ஒருவன் சொல்லும் பொய்யை நம்புவதற்கு ஆயத்தமாக இருக்கின்ற இன்றைய சமூகத்தில் அத்தனைபேரும் சேர்ந்து சொல்லுகின்ற உண்மையைச் சந்தேகக் கண்கொண்டு பார்க்கும் நிலைமையே பல வேளைகளில் நீடிக்கின்றது! ஆயினும், உண்மையே வெல்லும். அதுவே உண்மை!

*(வரதன், மன்னார்)*
**கே: முத்தையா முரளிதரன் தன் வாழ்க்கை வரலாற்றைப் படமாக எடுக்கும் முயற்சியில் முரளிதரனாக நடிக்க இருக்கும் சேதுபதியை அப்படத்தில் நடிக்கவேண்டாம் என தமிழ்த் திரையுலக இரசிகர்கள், குறிப்பாக ஈழத்தமிழர்கள், ஏன் கேட்டு வருகின்றார்கள்?**
**ப:** என்ன வரதன், இதுகூட உங்களுக்குத் தெரியாதா! அவரின் விளையாட்டுக்கள் எல்லோருக்கும் நன்கு தெரிந்ததால்தான்!

*(அன்ரன், யாழ்ப்பாணம்)*
**கே: எவ்வளவு பயனுள்ள, புத்திசாலித்தனமான, விவேகமான பதில்களை இரசிக்கக்கூடிய வகையில் மிகவும் நகைச்சுவையாக அளித்து வருகின்றீர்கள். எப்படி, எங்கிருந்து யோசிக்கின்றீர்கள்?**
**ப:** எங்கிருந்து யோசிப்பது! பூமியில் இருந்துகொண்டுதான்! எல்லாம் அவன் போட்ட பிச்சை அன்ரன்!

*(றதி, யாழ்ப்பாணம்)*
**கே: இப்போது நம்முடைய தமிழ்த் தேசியக் கட்சிகள் அடிக்கடி ஒன்று கூடுகின்றன. இவர்கள் இவ்வாறு ஒன்றாகச் சேர்ந்து வருவது நல்ல சகுனமாகக் கொள்ளலாமா?**
**ப:** றதி, இவர்கள் தையல்காரர்மாதிரி! வெட்டுவார்கள், மூட்டுவார்கள், சிலவேளைகளில் மூட்டியதை அவிழ்ப்பார்கள், பின் அவிழ்த்ததைச் சேர்ப்பார்கள். இப்படியே வெட்டி, மூட்டி, அவிழ்த்து, சேர்த்து தங்கள் தொழிலைத் தொடர்வார்கள்!

*(அமல், யாழ்ப்பாணம்)*
**கே: உங்கள் எழுத்தை வாசிக்க ஒரு பெரிய கூட்டமே இருக்கின்றது. நீங்கள் ஒரு சஞ்சிகையை ஆரம்பிக்கலாமே!?**
**ப:** அமல், இன்றைய சூழலில், சஞ்சிகைகள் வெளியிடுபவர்களை நீங்கள் சந்திக்கவில்லைப்போல் தெரிகின்றது! சந்தித்திருந்தால், உங்கள் யோசனை, என்னைத் தெருத்தெருவாக அலையவிடுவதற்கான யோசனையோ எனச் சிந்திக்கத் தோன்றுகின்றது! ஏனெனில், சஞ்சிகைகளைச் செய்பவர்கள் அவற்றின் சுமைகளை மெல்லவும் இயலாமல், துப்பவும் முடியால், விழுங்கவும் முடியாமல் விம்மிவிம்மித் தெருத்தெருவாய்த் திரிகின்றார்கள், வாசகர்களிடம் விற்றுக் சஞ்சிகைக் கடனை ஈடுசெய்வதற்காக!

**உங்கள் கேள்விகளை, பெயர், முகவரியுடன் குறிப்பிட்டு, 'என் கேள்விக்கென்ன பதில்', 'அமைதித்தென்றல்', உண்ணாப்புலவு, முல்லைத்தீவு என்ற முகவரிக்கோ, anpuomi1970@gmail.com என்ற மின்னஞ்சலுக்கோ, அல்லது 0778 648 548 என்ற எண்ணுக்கு SMS, Viber அல்லது WhatsAppக்கோ அனுப்பி வைக்கலாம்.**

# இறைபாதமே ஞானத்தின் ஊற்று



புனித ஜான் மரிய வியான்னி (1786 - 1859) ஆர்ஸ் கிராமத்தின் பங்குத் தந்தையாக இருந்தபோது அவரிடம் பாவசங்கீர்த்தனம் செய்யவும் அவரன் மறையுரைகளில் வெளிப்படும் ஞானத்தைப் பெறவும் அநேக மக்கள் ஆர்ஸ் நகருக்குப் பெருங்கூட்டமாய் வந்தார்கள்.

சாதாரண மக்கள் மட்டுமல்ல குருவானவர்கள், ஆயர்கள், கர்தினால்கள், துறவுமட்டப் பெரியோர்கள் வந்து அவரின் மறையுரைக-ளில் வெளிப்பட்ட தெய்வீக ஞானத்தைக் கண்டு அதிசயமடைந்தார்கள். குருத்துவப் பயிற்சியின்போது ஞானம் இல்லை. அறிவு இல்லை எனக் கருதி குருப்பட்டம் இவருக்குக் கொடுக்கவே தயங்கியவர்கள் இவரில் வெளிப்பட்ட ஞானத்தைக் கண்டு வியந்தார்கள். ஏனெினல் அவர் இறை ஞானத்தால் மட்டுமே செயற்பட்டார்.

18ம் நூற்றாண்டில் மிகவும் புகழ் வாய்ந்த மறையுரை யாளர், பெயர் பெற்ற ஞான வல்லுனர், குருமடப் பேராசிரியர் லக்கோர்தேர் என்பவர். அவர் புனித ஜான் மரிய வியான்னியிடம் வந்து உரையாடி, ஆலோசனைகளைப் பெற்றப் பின் மிகவும் மகிழ்வுடன் திரும்பிச் சென்றார்.

அவரின் வருகையைக் குறித்து ஜான் மரிய வியான்னி குறிப்பிடும்போது "ஒரு மலை மடுவைத் தேடி வந்திருக்கிறது. ஞானமுள்ளவர் ஞானமற்ற என்னைக் காண வந்தார். அறிவிற்சிறந்தவர் அறிவற்ற என்னிடம் வந்து ஆலோசனை பெற வந்தார்" என்றார்.

ஜான் மரிய வியான்னியிடம் அபூர்வ சிந்தனைகளும் ஞானக் கருத்துக்களும் வெளிப்பட்டன. அவர் எந்த ஞானியிடமும் போகவில்லை அறிவாளியை நாடவில்லை. கருத்துக் குவியலைக் கொண்டிருக்கும் நூலகம் செல்லவில்லை. அவர் ஞானத்தைத் தேடி திவ்விய நற்கருணை நாதரின் பாதத்தண்டை மட்டுமே வந்தார். வேதாகமத்தை இதயத்தில் பதித்தார். இறைவனிடம் மெல்லிய ஆலோசனைகளை ஜெபத்தில் பரிசுத்த ஆவியின் வல்லமையால் உணர்ந்தார். அங்கு பெற்ற ஞானத்தையே மக்களுக்குப் போதித்தார். (தொடர்ச்சி 9ம் பக்.)

## காவலன் கலசம்

# யாழ்ப்பாண மறைமாவட்டம் ஒரு வரலாற்றுப் பார்வை

## பின்னணி, தோற்றம், வளர்ச்சி

(சென்றவாரத் தொடர்ச்சி...)

### தொலைதூரங்களில் அமைந்துள்ள கிறிஸ்தவ சமூகங்கள்:

பல தொலைதூரங்களில் உள்ள கிறிஸ்தவ சமூகங்களில் மிகவும் குறைந்தளவு கிறிஸ்தவர்கள் உள்ளனர். இப்படிப்பட்ட இடங்களில் உள்ள ஆலயங்களில் அங்குள்ள எல்லோரும் அல்லது பெரும்பாலானோராவது அருளடையாளங்களைப் பெறும் வகையில் குருவானவர் ஒரு சில நாட்களே தங்கக் கூடியதாயிருக்கும். ஆனால் இப்படியான சில கிராமக் கிறிஸ்தவ சமூகங்களிலே பல கிறிஸ்தவர்கள் தங்கள் தவறுகளிலேயே ஊறியவர்களாக, படிப்பறிவில்லாதவர்களாக போதியளவு மறையறிவும் இல்லாதவர்களாக உள்ளனர். குருவானவர் ஒரு சில நாட்களில் இவர்களை வாழ்வுக்கு இட்டுச் செல்லும் ஒடுக்கமான பாதையில் செல்லச் செய்வது கடினம்.

### சாதி வேறுபாடுகள்

இத்திருத்தூது மாவட்டப்பகுதியில் கிறிஸ்தவர்கள் கிறிஸ்தவர்களல்லாதோர் மத்தியில் காணப்படும் சாதி வேறுபாடுகள் கத்தோலிக்கர் மத்தியில் ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவதற்கு மட்டுமன்றி நற்செய்தியறிவிப்புக்கும் தடையாயுள்ளது. ஆயினும் இந்தியாவில் கடைப்பிடிக்கப்பட்டுவரும் இறுக்கமான, கடுமையான சாதிக்கட்டமைப்புக்கள் போல இங்கு இல்லாதது காரணமாக மறைப்பணியாளர் இவர்கள் மத்தியில் நற்செய்தியை அறிவிப்பதில் அவ்வளவு சிரமத்தை எதிர்நோக்கவில்லையென்றுதான் கூறவேண்டும்.

### மக்களின் பிடிவாதப்போக்கு

தங்கள் மூதாதையர் கடைப்பிடித்து வந்த பாரம்பரியங்களை அவை நன்மையாகவோ, தீமையாகவோ அல்லது நன்மை தீமை என்ற வகைப்படுத்த முடியாதவையாகவோ இருந்தாலும்அவற்றில் ஒரு துரும்பும் பிசகாது கடைப்பிடிப்பதையே இவர்கள் விரும்புகின்றார்கள். எனவே இவர்கள் மத்தியில் பணியாற்றும் மறைபணியாளர் மிகவும் பொறுமையாகவும், சாதுரியமாகவும் பணியாற்றினால்தான் இவர்கள் மத்தியில் புரையோடிப் போயிருக்கும் சில தவறான பாரம்பரியங்களைக் களையலாம்.

அத்துடன் மறைபணியாளரும் தமக்குள்ளே ஒரு செயற்பாட்டு ஒருமைப்பாட்டை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். ஒருவர் ஒரு பாரம்பரிய நடைமுறையைச் சகித்துக் கொள்ளும் போது மற்றவர் அதனைத் தடுக்க முற்படும் போது அங்கு குழப்ப நிலை ஏற்படலாம். எனவே இறையருளுடன், கருத்தொருமிப்புடன் மறைபணியாளர் பணியாற்றும்போது சற்றுக் காலம் தாழ்த்தினாலும் குறை-களைப் படிப்படியாகக் களையலாம்.

### பாடசாலைகளும், மறைக்கல்வியும்

ஐரோப்பிய மறைப்பணியாளர் வருவதற்குமுன் (19ம் நூற்றாண்டின் நடுப்பகுதிக்கு முன்) மிகச் சிறியளவு கத்தோலிக்கப் பாடசாலைகளேயிருந்தன. அப்போதிருந்த சிறியளவினரான மறைபணியாளருக்கு மறைக்கல்வி புகட்ட நேரமும் இருக்கவில்லை. சில மறைபணியாளருக்கு அந்த ஆர்வமும் இருக்கவில்லை. பிள்ளைகளின் பெற்றோரும் மிகவும் கவனக்குறைவாகவேயிருந்தனர். அவர்களே போதியளவு கல்வியறிவும், மறையறிவும் பெறாதிருந்தமையால் அவர்களது மதநம்பிக்கையெல்லாம் வெறும் வெளிச்சடங்குகளிலேயே தங்கியிருந்தது.

### பிரிவினை

ஏற்கெனவே குறிப்பிடப்பட்டிருந்த பிரிவினை (விசுவாசப் பரப்புதல் சபை x கோவா பத்ரோவாதோ பிரிவினை) இன்னும் வடக்கில் தீர்ந்தபாடில்லை. அத்துடன் இது பல ஆன்மாக்களின் இழப்புக்கும் காரணமாக இருந்துவந்தது. மன்னார், மாதோட்ட மறைத்தளங்களில் இழப்பு மிகவும் மோசமாகவிருந்தது. பழைய பிரிவினைவாதிகளும் அவர்களது தீவிர ஆதரவாளர்களும் சில மறைத்தளங்களில் இன்னமும் செயற்பட்டுக்கொண்டேயிருந்தனர். இதுபோன்றவர்களைப் பற்றித் தான் புனித பாவிலு தீமோத்தேயுவுக்கு எழுதிய மடலில் குறிப்பிட்டிருக்கின்றார்: "தன்னலம் நாடுவோர், பண ஆசையுடையோர், வீம்புடையோர், செருக்குடையோர், பழித்துரைப்போர், பெற்றோருக்கு கீழ்ப்படியாதோர், நன்றியற்றோர், தூய்மையற்றோர், அன்புணர்வற்றோர்,

**அருட்பணி S.V.B. மங்களராஜா**

ஒத்துப்போகாதோர், புறங்கூறுவோர், தன்னடக்கமற்றோர், வன்முறையாளர், நன்மையை விரும்பாதோர், துரோகம் செய்வோர், கண்மூடித்தனமாகச் செயற்படுவோர், தற்பெருமை கொள்வோர், கடவுளை விரும்புவதை விடச்சிற்றின்பத்தை அதிகம் விரும்புவோர் தோன்றுவர். இவர்கள் இறைபற்று உடையவர்கள் போன்று காணப்படுவார்கள். ஆனால் இறைப்பற்றின் வல்லமையோ அவர்களிடம் இராது..." (2 தீமோத். 3: 2-5) பிரிவினைகளின் தீயவிளைவுகள் இவை தாம். இத்தீய விளைவுகள் படிப்படியாகக் குறையும் என எதிர்பார்க்கின்றோம். புளிக்காரம் போல இவர்கள் செயற்பட்டு நல்ல கிறிஸ்தவர்களும் பாதிக்கப்படாதிருக்க இறைவன் அருள்வாராக. (தொடரும்...)

### இறைபாதமே ஞானத்தின் ...

(8ம் பக்கத் தொடர்ச்சி)

வேதாகமத்தில் "உங்களில் எவருக்காவது ஞானம் குறைவாயிருந்தால் அவர் கடவுளிடம் கேட்கட்டும். அவருக்குக் கொடுக்கப்படும். முகம் கோணாமல் தாராளமாய்க் கொடுப்பவர் அவர்" என்கிறார் புனித யாக்கோபு (1:5).

பாலன் இயேசுவைத் தேடி கீழ்த்திசை ஞானிகள் ஒட்டகத்தின் மீது ஏறி பாலைவனப் பயணம் செய்து எருசலேம் நகர் வருகிறார்கள். அவர்கள் ஞானத்தைக் கொண்டிருப்பவரும் அதிசய ஆலோசனையின் கர்த்தராகிய பாலன் இயேசுவைப் பின்பற்றி எருசலேம் நகர் வருகின்றார். (எசா9:6)

விண்மீன் மறைவினால் யூதாவின் சிற்றரசன் ஏரோதிடம் "யூதாவின் அரசர் பிறந்திருக்கிறாரே அவர் எங்கே? அவருடைய விண்மீன் எழுதலைக் கண்டு அவரை வணங்க வந்தோம்" என்கிறார்கள்.

மூன்று ஞானிகள் கீழ்த்திசை நாடுகளில் ஒன்றான அசிரியா, பாபிலோன் அல்லது பெர்ஷியா நாடுகளிலிருந்து வந்திருக்க வேண்டும். மெடஸ் (Medes) என்ற குருகுலத்தைச் சேர்ந்தவர்கள். சொராஸ்டர் மதக் கொள்கை உடையவர்கள். அரசியலிலும் மக்கள் மதிப்பிலும் உயர்ந்து காணப்பட்டவர்கள். நாட்டின் ஆளுமையில் பங்கு பெற்ற அறிஞர்கள்.

மேலும் அவர்கள் வானசாஸ்திரிகளாய் இருந்தார்கள். வானத்தின் நட்சத்திரங்களையும் ஆராயும் ஞானத்தைக்கொண்டவர்களாயும்இருந்தார்கள். ஆராய்ச்சியில் வல்லுனர்களாய் இருந்ததால் அதிசய விண்மீன் வெளிப்பாட்டை அறிந்து ஞானத்தின் கர்த்தரை வணங்கக் கீழ்த்திசை நாட்டிலிருந்து பல மாதங்கள் பாலைவனத்தில் பயணம் செய்து பாலன் இயேசுவை மாட்டுக் கொட்டகையில் கண்டு நெடுஞ்சாண் கிடையாக விழுந்து ஆராதிக்கிறோம்.

உலக ஞானத்தில் சிறந்தவர்கள் கர்த்தரைத் தேடி மாட்டுக் கொட்டிலில் கிடத்தப்பட்டிருக்கும் பாலன் இயேசுவை ஆராதிக்கிறார்கள். தெண்டனிடுகிறார்கள். மூன்று காணிக்கைகளை அர்ப்பணித்து இயேசுவை இரட்சகராகவும் குருவாகவும் அரசராகவும் ஏற்றுக்கொள்கிறார்கள்.

ஞானத்தில் சிறந்தவரும் மறை வல்லுனரும், நூற்றுக்கணக்கானபுத்தகங்களைஎழுதிஇறைஞானத்தை வெளிப்படுத்தியவருமான பேராயர் புல்டன் ஷீன் இவ்வாறு குறிப்பிடுகிறார்.

"நான் எவ்விடத்தில் இருப்பினும், என் அறைக்கு அடுத்த அறை திவ்விய நற்கருணை ஸ்தாபகம் உள்ள சிற்றாலயமாகத்தான் இருக்கும். குறைந்தது ஒரு மணி நேர திவ்விய நற்கருணை ஜெப ஞானமே என்னிடமிருந்து வெளிப்பட்டன" என்றார். இன்று நாம் ஞானமுள்ளவர்களாய், நடந்துகொள்ள இயேசுவின் பாதப் படியில் மணிக்கணக்காய் அமர்வோம். அவரின் ஆலோசனைக்குச் செவிமடுப்போம். ■

# பெருந்தகையர் பட்டம் பெற்ற அமரர் யோசப் பிலேந்திரம்

## – மறைவின் ஐந்தாம் ஆண்டு நினைவில் –



யாழ் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அமரர் யோசப் பிலேந்திரம் அவர்கள் வத்திக்கான் திருப்பீடத்தினால் புனித பெரிய கிரகோரியார் பாப்பிறை சபை பெருந்தகையர் (Knighthood Of the Pontifical Order of Saint Gregory the Great) பட்டம் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டவர் ஆவார்.

வத்திக்கான் தலைமைப்பீடம் நேர்மையான, தூய்மையான அர்ப்பணம்மிக்க வாழ்வினால் திருஅவையின் தலைமைப்பீடத்திற்கும் திருஅவைக்கும் சமூகத்துக்கும் பணிவுடனும் பிரமாணிக்கத்துடனும் பணிபுரிந்து, மக்கள் மத்தியிலும் திருப்பீடத்தின் மத்தியிலும் மிக்க மதிப்பும் அபிமானம் உள்ள கனவான்களைத் தெரிவு செய்து இந்தப் பட்டத்தை வழங்கிக் கௌரவிக்கின்றது. அமரர் யோசப் பிலேந்திரம் அவர்கள் இப் பட்டத்தைப் பெறத் தகுதியானவராகத் தெரிவு செய்து கடந்த 2006ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 10 ஆம் திகதி இப்பட்டத்தை வழங்கி வத்திக்கான் திருப்பீடம் அவரைக் கௌரவித்தது.

அமரர் யோசப் பிலேந்திரம் லண்டன் மாநகரில் மரியாயின் சேனை அங்கத்தவராகவும் ஏழைகளுக்காகப் பணிபுரியும் சபையிலும் இணைந்தவராகவும் இருந்து திருஅவைக்கும் சமூகத்துக்கும் அளப்பரிய சேவையாற்றியுள்ளார்.

நெருக்கடியான நிலையில் இருந்த ஆபிரிக்க நாடுகளான உகண்டா தன்சாணியா ஆகிய நாடுகளில் இறை அரசைக் கட்டியெழுப்பும் பணியினை மிகவும் அர்ப்பணத்தோடு முன்னெடுத்தவர்.

அதுமட்டுமல்லாமல், தனது தாய் மண்ணினதும், யாழ் மறைமாவட்டத்தினதும் பலதேவைகளை உணர்ந்தவராக அவற்றைத் தீர்த்து வைக்கும் பணிகளையும் தாராள மன-தோடு புரிந்திருக்கின்றார். குறிப்பாக யுத்தகால அனர்த்தங்களினால் வெகுவாகப் பாதிக்கப்பட்ட யாழ்ப்பாண மாணவர்களின் கல்வித் தேவைகளைப் பூர்த்தி செய்ய ஆர்வத்தோடு செயற்பட்டார்.

### நீந்தார் புகழுரை

யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியின் கல்வி வளங்களை அதிகரிக்க பல உதவிகளைப் புரிந்ததோடு, போரினால் சேதமடைந்த கொழும்புத்துறையிலுள்ள புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியின் புனரமைப்புக்கு குறிப்பாக அங்கு உருவாக்கம் பெறும் குரு மாணவர்கள் பயன்படுத்தும் நூலக வளர்ச்சிக்கு தம் பங்களிப்பை வழங்கியுள்ளார். இதனைவிட நூலகத்துக்குத் தேவையான பல நூல்களையும் அன்பளிப்புச் செய்துள்ளார்.

அமரர் யோசப் பிலேந்திரம் அவர்கள் புனிதர் பட்டம் பெற்ற திருத்தந்தையர்களான புனித 23வது அருளப்பர் அவர்களையும், புனித 2ம் அருளப்பர் சின்னப்பர் அவர்களையும் நேரடியாகக் கண்டு ஆசீர் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

திருஅவையின் வளர்ச்சியில் பெரிதும் பங்களிப்புச் செய்த பொதுநிலையினர்களில் அமரர் யோசப் பிலேந்திரம் அவர்களும் அடங்குவார். ●

காவலன் கலசம்

# வழிபாடு வாழ்வாகுமா!!




அருட்பணி ச.ஜே.சுரேந்திரராஜா அ.ம.தி
(sjsurenomi@gmail.com)

*(சென்ற இதழின் தொடர்ச்சி...)*

**வழிபாட்டில் திரு இசை**

எவ்வாறாயினும், இவை வழிபாட்டின் ,யல்போடும், மனிதனின் வாழ்வோடும் பேசுகின்றன. உதாரணமாக தவக்காலம் என்றால் அதற்கே உரித்தான பாடல்களைத் தான் பாடுகின்றோம். அதேபோல் இறந்தவரின் அடக்கத் திருப்பலி என்றாலும் அதற்குரிய பாடல்களைத் தான் பாடுகின்றோம். பாடல்களும் இசையும் வாழ்வோடு பேச வேண்டும்.

பயிற்சிகளற்றமுயற்சிகள்வழிபாட்டில் இடம்பெறக்கூடாது. திரு இசை, திரு வழிபாட்டின் ஒரு முழுமையான பகுதியாக இருப்பதால், வழிபாட்டின் பொதுவான நோக்கத்திலே பங்கேற்கிறது. இது கடவுளை மகிமைப்படுத்தவும், இறைமக்களைத் தூய்மைக்குள் இட்டுச்செல்லவும் உதவுகின்றது. பொருத்தமான பாடல்களை தேர்ந்தெடுப்பது என்பது திரு வழிபாட்டில் பங்கேற்கும் பாடகர் குழுவினுடைய முக்கிய பணியாகும். இவர்களுடைய பாடல் பயிற்சி அனைவருக்கும் பல விதத்தில் உதவுகின்றது என்பதை நினைவில் கொள்ள வேண்டும். இவர்கள் தெரிவுசெய்யும் பாடல்கள் அன்றைய நாளுக்குரிய வழிபாட்டின் அடிப்படையில் அமைய வேண்டுமே தவிர அன்றைய வாசகங்களை மாத்திரம் அடிப்படையாகக் கொள்ளக்கூடாது.

மிக உன்னதமான வழிபாட்டு இசைக்கருவி என்னவென்றால் அது மனிதனினுடைய குரலே. இது இறைவன் கொடுத்த சாயலையும் பாவனையையும் பிரதிபலிக்கின்றது. தன்னை அன்புசெய்யும் ஒருவரால் தான் தனது குரலை அறிந்து அதனால் இறைவனை அன்பு செய்ய முடிகின்றது. ஒரு செபத்தைப் பாடுகின்ற போது அது அந்த உணர்வுக்குள் எங்களைக் கடத்துகின்றது. எங்களை மட்டும் அல்ல செபிப்போரையும் கொண்டு செல்கின்றது. வழிபாடு முழுமையான அர்த்தம் பெறுகின்றது. 'ஏனெனில் பாடுவது இதய மகிழ்ச்சியின் அடையாளம் (காண். திப 2:46). எனவே 'பாடுவது அன்பு செய்பவரின் இயல்பு' என்று புனித அகுஸ்தின் பொருத்தமாகச் சொல்கின்றார் மேலும் 'இனிது பாடுகிறவர் இருமுறை வேண்டுகின்றார்' என்னும் வாக்கு தொன்று தொட்டு வரும்' (உ.தி.நூ.பொ.ப: 39). திருப்பலியின் போது வருகைப் பாடல்கள், தியானப்பாடல்கள், காணிக்கைப் பாடல்கள், நற்கருணை, நன்றி மற்றும் இறுதிப்பாடல்கள் என அழகாக வறையறுத்துப் பாடப்படுகின்றன. அதிலும் இறுதிப்பாடல்களில் மரியன்னைக்கு அல்லது புனிதர் ஒருவருக்கு எனப் பாடல்கள் பாடப்படுகின்றன. இதை விட சில சந்தர்ப்பங்களில் இறுதிப்பாடல்கள் அந்த நாளுக்குரிய வழிபாட்டின் தேவையறிந்து பாடப்படுகின்றன. உதாரணமாக, வெள்ளிக்கிழமைகளில், யேசுவின் திரு இருதயத்திகு அல்லது நினைவு நாட்களில் அதற்குரிய பாடல்களும் பாடப்படுகின்றன. அநேகமாக திருப்பலியின் இறுதி யில் அன்னை மரியாவுக்கு பாடல்கள் பாடுவது ஒரு அழகான பண்பாடாக எமது மக்கள் பேணிவருகின்றனர்.

திரு இசை (Musica Sacra) எப்போதும் திருஅவையின் விசுவாசத்தோடு இணைந்து காணப்பட வேண்டும். வழிபாட்டு இசை வழிபாட்டில் இடம் பெறும் ஒவ்வொரு அசைவையும் வரைவிலக்கணப்படுத்துகின்றது. அதன் ,ராகம், வரிகள், அதனுடைய அமைப்புக்கள் அனைத்தும் வழிபாட்டின் சிறப்பையும், அதன் தன்மையையும் வாழ்விக்கின்றது.

**பழைய ஏற்பாட்டில் இசையின் பயன்பாடு**


பாடலும் இசையும் எபிரேய கலாசாரத்திலே, பண்பாட்டிலே இணைந்ததாகவும் அதிலே அவர்கள் தங்களை அடையாளப்படுத்திக் கொண்டதாகவும் தெளிவாகக் காண்கின்றோம். பண்டைய யூத சமூகத்தில் எவ்வாறு கவிதைகளை எழுதி அதைப் பாடல்களாக பாடுகின்ற அளவிற்கு இசையைக் கற்று தேர்ச்சியடைந்தனர் என்பதற்குத் திருப்பாடல்கள் மிக சிறந்த உதாரணமாகின்றது. இந்தப் பெருமை எல்லாம் தாவிது மன்னனையே சாரும். இன்றுவரை கிறிஸ்தவ பாரம்பரியத்திலும்திருப்பாடல்களைபயன்படுத்தி பாடல்களை இயற்றியது போன்று வேறு எந்த மொழி நடையுமே அதிகம் பயன்படுத்தப்பட்வில்லை என்றே சொல்ல வேண்டும். பழைய ஏற்பாட்டில் இசையின் பயன்பாடு மிகவும் விசித்திரமான முறையிலும், அதனால் அடைந்த பலன்களும் எண்ணற்றவை. பல இடங்களிலே பாடல்களைப் பாடி இறைவனின் ஆசீரை இறஞ்சிக் கேட்பதும், பாவங்கள் செய்கின்ற போது தவறுக்காக பாடல்களை பாடுவதும், வெற்றிக்காகப் பாடல்களைப் பாடுவதும், தோல்விகளில் பாடல்களைப் பாடுவதும் பழைய ஏற்பாட்டு நூல்களிலே பரந்து காணப்படுகின்றது. உதாரணமாக எண்: 21:17,18, யோசு: 10:13, 2சாமு: 1:18, வெற்றிப்பாடல் விப: 15:20-21, நீதி: 6. 15:16, 1சாமு: 18: 6-7, வீழ்ச்சியின் போது பாடிய பாடல் 2சாமு: 1:19-27, வரவேற்பு - தொநூ: 31:27 'எனக்கு ஒன்றும் தெரிவிக்காமல் என்னை ஏமாற்றிவிட்டு, ஏன் இரகசியமாய் ஓடி வந்தீர்? நான் மேளதாள வாத்தியங்களுடன், மகிழ்ச்சியாய் உங்களை வழியனுப்பி வைத்திருப்பேனே'. வீட்டின் விழாக்களில் இசை முக்கிய பங்கு வகித்தது என்பதை இது காட்டுகிறது. வெள்ளத்தின் போது நோவா மற்றும் அவரது குடும்பத்தினரால் இசை பாதுகாக்கப்பட்டது என்பதையும் இது காட்டுகிறது. பேழையில் இசைக்கருவிகள் எடுக்கப்பட்டன என்பதில் சந்தேகமில்லை.

(தொடரும்...)

# 200 ஆம் ஆண்டை நோக்கிப் பயணிக்கும் போர்டோவின் திருக்குடும்ப சபைச் சகோதரிகள்

**ஈழத்தில் சங்கமித்த ஐரோப்பிய முத்துக்கள்**

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*



Sr. Marie Eustella

பெல்ஜியத்தில் உள்ள அவின் நகரில் நீக்கிலஸ் கன்கென் அல்பேட்டின்ஸ் ரீல் தம்பதியர்க்கு மகளாக 1892ம் ஆண்டு வைகாசி 1ம் திகதி மாறி யுஸ்ரல் பிறந்தார். தகப்பன் குதிரைச்சவாரி செய்யும் வீரர். 1906ம் ஆண்டு மார்கழி 2ம் திகதி தாய் இறந்து விட்டார். வீட்டில் 4 ஆண்கள் 3 பெண்களும் இருந்தனர். மூவர் சிறுவயதில் இறந்தனர். ஓர் இளம் பெண் தனது 17 வயதில் இறந்து விட்டார்.

பேர்த்தா பிறந்த அதே மாதத்தில் திருமுழுக்குப் பெற்று சில வருடங்களின் பின்பு 1903 வைகாசி 3ம் திகதி முதல்நன்மையும் 1905 வைகாசி 22ம் திகதி பூர்டின் ஆலயத்தில் உறுதிப்பூசுதலும் பெற்றார். 6வது தொடங்கி 14 வயது வரையும் எமது அமல உற்பவ சபைச் சகோதரிகளின் வகுப்பிற்கு சென்று படித்து வந்தார். தாய் இறந்தபின் லீயெஜ் சென்று தன் சகோதரன் லம்பேட் உடன் ஒரு தொழில் தேடும் நோக்குடன் வாழ்ந்து வந்தா. அவ்வேளையில் பேர்த்தாவுக்கு வயது 17 துறவற வாழ்வில் விருப்பம் கொண்டார். இதைப் பற்றிச் சிந்தித்து மன்றாடினார்.

இவரின் சகோதரன் கிறிஸ்தவக் கடமைகள் செய்வதுமில்லை. சகோதரியின் போக்கையும் கவனிக்கவுமில்லை ஆலயம் செல்வதுமில்லை. தன் அழைத்தலுக்கு ஆபத்தின்றி ஒரு இடம் கிடைக்க திரு இரு இருதய நாதரிடம் நவநாட்தொடங்கி பேர்த்தா செபித்து வந்தார். நவநாட்கள் முடியுமென, பேர்த்தாவின் சகோதரி, பிள்ளைகளைப் பராமரிக்க பக்தியுள்ள இளம் பெண் தேவை என்று தன்னை வரும்படி அழைத்ததால் திரு இருதய நாதருக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு அங்கு சென்று பணி புரிந்தார். பணியில் தடை ஏற்பட்டாலும், செபத்தினால் யாவற்றையும் மேற்கொண்டு வந்தார். ஒரு குழுவில் போய் சேர விரும்பினாலும், தந்தை அதற்கு உடன்படவில்லை. தந்தையின் அனுமதி கிடைத்தபின் 1912ம் ஆண்டு ஆனி 25 ஆயத்தக்கன்னியர் இல்லம் சென்றார். இவ்விடம் விளங்கிய தெளிந்த அறிவு, முன்னுணர்வால் அறிந்து கொள்ளல் போன்றன இவரின் அழைத்தல் வாழ்வுக்கு உதவியாக இருந்தன. கைவேலை தையல், படிக்க ஆர்வம், படிப்பிக்க ஆர்வம், பிள்ளைகளில் விருப்பம் இருந்தபடியால் அமல உற்பவ கிளையில் சேர்ந்து நன்மை செய்ய விரும்பினார்.

1913ம் ஆண்டு பங்குனி மாதம் 25ம் திகதி துறவற உடை எடுத்து சிஸ். மேரி யூஸ்ரல் என்னும் பெயரைப் பெற்றுக்கொண்டார். நவகன்னியர் காலம் முடிந்ததும் 1915ம் ஆண்டு புரட்டாதி 8ம் திகதி முதல் அர்ப்பணம் செய்துகொண்டார்.

முதலாம் உலகப் போரில் ஜேர்மனியரால்

## அருட்சகோதரி அம்புறோஸின் மார்க்

நாடுபிடிக்கப்பட்ட போது 1916,1917, 1918ம் ஆண்டுகளில் தன் அர்ப்பணத்தைப் புதுப்பித்துக்கொண்டார். யுத்தம் முடிவுற்றதும், தனது உருவாக்கத்திலும் படிப்பித்தலிலும், முன்னேற்றமடைந்து நித்திய அர்ப்பணம் செய்ய விருப்பம் கேட்டார். அதன் பிரகாரம் போர்டோவுக்கு அழைக்கப்பட்டு, அர்ப்பணத்திற்கு ஆயத்தம் செய்து, 1919ம் ஆண்டு ஐப்பசி 1ம் திகதி நித்திய அர்ப்பணம் செய்து கொண்டார்.

1920ம் ஆண்டு ஆடி மாதக் கடைசியில் பெல்ஜியத்தைவிட்டு வெளியேறி, இலங்கை செல்லும் குழுவுடன் சேர்ந்து, ஐப்பசி 13ம் திகதி மார்செயி துறைமுகம் வழியே புறப்பட்டு கார்த்திகை தொடக்கத்தில் இலங்கை வந்து சேர்ந்தார். முதலில் பம்பலப்பிட்டி குழுவில் சேர்ந்து ஆங்கிலம் படித்து போடிங் பிள்ளைகளுக்கு உதவி செய்ய முயற்சித்தார். 1923ம் ஆண்டு பிள்ளைகளுக்கு பிரான்சிய மொழி படிப்பித்து, தையல், தாதி வேலைகளிலும் உதவி செய்தார். 1923 மார்கழி இறுதியில் வெண்ணப்புவா மடம் சென்று தலைவிக்கு உதவி செய்தும், ஆசிரிய கல்லூரியையும் மேற் பார்வை செய்தார். 1931ம் ஆண்டு 19ம் திகதி நாவலப்பிட்டி வைத்தியசாலையில் சேர்ந்தார்.

1935ம் ஆண்டு யாழ்ப்பாணம் வந்து, வருடாந்தத் தியானத்தில் பங்குபற்றினார். தொழிலகத்தில் ஒரு சகோதரி மட்டும் பணிபுரிந்ததால் பிறர் அன்புடன் அங்கு தன் பணியைத் தொடர்ந்தார். 1938ம் ஆண்டு நல்ல உடல் சுகத்துடன் அமல மரித்தியாகிகளின் தொழிலகத்தின் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டு, தியாக உள்ளத்துடன் வேலைத்திறமையும் கொண்டு, வெளிப்பிள்ளைகளுடன் நல்ல உறவையும் வளர்த்துக்கொண்டார்.

1950ம் ஆண்டு, சித்திரை மாதம் புனித யூபிலி ஆண்டு நோமாபுரிப் பயணத்தில் இவவிற்கு உத்தரவு கிடைத்தது. எனவே மகிழ்வுடன் இத்தாலி சென்று யூபிலியைக் கொண்டாடி, பாப்புவின் ஆசீர்வாதமும் பெற்று, அங்குள்ள பல ஆலயங்களையும் சந்தித்தார். 1950ம் ஆண்டு, வைகாசி 24ம் திகதி சபைத்தலைவியின் ஆலோசகர் "இறைவன் மாத்திரம்" என்ற ஆயத்த நிலையில் சேர அனுமதி கொடுத்தார்.

அருட்சகோதரி யூஸ்ரல் மாறி பல தடவைகள் உடல் நலக்குறைவினால் சத்திரசிகிச்சைகளுக்கு உட்பட்டார். இருந்தாலும் தன்னைக்கவனியாது, தொழிலகப் பொறுப்பை மேற்பார்வை செய்தல் கைப்பணிகள் மற்றும் சமையல் வேலைகள் கணக்குகள் சரி செய்தல், நோயாளர்களைக் கவனித்தல் போன்ற காரியங்களில் ஈடுபட்டாலும் வெளியாட்களுடன் விவேகத்துடன் தொடர்பு கொள்வார்.

*(தொடரும்...)*

## 50வது ஆண்டு திருமண நாள் வாழ்த்துக்கள்

திரு.திருமதி. அமிர்நாதர் யோசேப்பின்
தம்பதியினரை மனமுவந்து வாழ்த்துகிறோம்




திருமண வாழ்வில் இணைந்து 27.10.2020 பொன் விழாக் காணும் என்றும் எங்கள் அன்பிற்கும் பாசத்திற்கும், மரியாதைக்கும் உரிய அமிர்தநாதர் யோசேப்பின் குடும்பம் இன்று போல என்றும் அன்றில் பறவைகளாய் வாழ்வில் எல்லா வளமும் நலமும் பெற்று இனிய தமிழின் இலக்கணமாய், இலக்கியமாய் பல்லாண்டு காலம் பரமனின் அருளால் மண்ணில் வளமுடன் வாழ வாழ்த்துகின்றோம்.

அருட்தந்தை இன்பநாதன் மகன்,
திரு. திருமதி அலெக்ஸ், வானதி (மகன் மருமகள்),
4ம் குறுக்குத் தெரு, பருத்தித்துறை. திரு. திருமதி. பில்சாந், அமலா (மகள், மருமகன்) ஜேர்மனி
உறவுகள்



## யுவதிகளுக்கான பயிற்சிநெறி

கல்விக்காகத் தம்மை அர்ப்பணித்துள்ள அப்போஸ்தலிக்க கார்மேல் துறவற சபைச் சகோதரிகளால் நடாத்தப்படும் யுவதிகளுக்கான பயிற்சிநெறி.

இப்பயிற்சி நெறி இவ்வருடம் கார்த்திகை மாதம் 10ம் திகதியிலிருந்து நான்கு மாதப் (4 மாத) பயிற்சிகள்.
(10.11.2010 இருந்து 10.03.2021 வரை)

க.பொ.த. உயர்தரம் முடித்த மாணவிகளுக்காக அச்சுவேலி கார்மேல் மடத்தில் ஆரம்பமாகும்.
விடுதி வசதி தேவைப்படும் மாணவர்களுக்கு வசதிகள் வழங்கப்படும்.
கணனி, ஆங்கிலம், வாழ்க்கைத்திறன், ஆளுமை வளர்ச்சி உள்ளடங்கிய கற்கைநெறிகள்:

- ஆங்கில இலக்கணம், ( எழுதுதல், உரையாடல், பாடல்)
- தேசிய தொழில்சார் தகுதி முறைமை – கணனி (NVQ நிலை 3, நிலை 4)
- சிங்கள மொழி
- ஆளுமை விருத்தியும், மகிழ்ச்சியான வாழ்வும்.
- மனைப்பொருளியல்
- தையல்
- பெண்கள் அலங்காரம்

அறிவை வளர்க்க, ஆளுமை விருத்தி அடைய, தொழில் வாய்ப்புத் தேர்ச்சிகளை அடைய, மிகக்குறைந்த கட்டணத்துடன் வழங்கப்படுகின்றது.

( 30.10.2020 க்கு முன்பு தொடர்பு கொண்டு பதிவைப் பெற்றுக் கொள்ளவும் )

விண்ணப்பப்படிவங்களைத் தபால் மூலம் பெற்றுக்கொள்ள பின்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள். 0771735962 - 021-2058526

மடத்துத்தலைவி
அப்போஸ்தலிக்க கார்மேல் மடம், அச்சுவேலி


## தமிழில் இலக்கியம்...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

ஆசிரியர் கண்டு பிடித்துத் தன்னை நிருபிப்பதாக நகைச்சுவையுடன் எழுதப் பட்டுள்ளது. கடவுள் மேல் பக்தியுள்ளவர்கள் எப்போதும் துணிவோடு திகழ்வார்கள் என்ற கருப்பொருள் கதையில் இழையோடுகின்றது. அவரது சிறுகதைகள் சிறுகதைகளுக்குரிய கட்டமைப்பினைக் கொண்டிருப்பதுடன் வாசிப்பார்வத்தைத் தூண்டக்கூடிய வளர்ச்சிப்படிகளையும் மொழிச்சிறப்பினையும் கொண்டு விளங்குகின்றன.

### நாடகங்கள்

அவர் எழுதிய நாடகங்களில் **'தனி நாயகம்'** அல்லது 'தஞ்சம் அளித்த தாதை' என்ற நாடகமானது இரண்டு அங்கங்களுடனும் ஆறு காட்சிகளுடனும் ஆக்கப்பட்டுள்ளது. இது ஒரு பிரஞ்ச் கதையினைத் தழுவி எழுதியதாக ஆசிரியர் குறிப்பிடுகின்றார். ஆனால் பாத்திரப் பெயர்கள் முழுவதையும் தமிழ்ப் பெயர்களாக ஆசிரியர் ஆக்கியுள்ளார். மதுரநாயகம் என்ற அருட்தந்தை சிறுவர் காப்பகம் ஒன்றினை நடத்துகின்றார். அவரது தந்தையாரான தனிநாயகமும் அவருடனேயே தங்கி அவரது பணிகளுக்கு உதவுகின்றார். அவ்வேளை அங்கு ஏற்படுகின்ற பொது உடைமைவாதக் கிளர்ச்சினால் புரட்சியாளன் ஒருவன் மதுரநாயகம் குருவானவர் அதற்கு எதிரானவர் என்று நினைத்து அவரை சுட்டுக்கொல்லுகின்றான். இதனால் பாதிக்கப்பட்ட அவரது தந்தை தனிநாயகம் கடவுளை தூசித்தும், பழிவாங்கும் எண்ணத்துடனும் விரக்தியடைகின்றார். அவருக்கு கருணாகரன் என்ற குருவானவர் 'அவரது மகன் வேதசாட்சியாக மடிந்தார்' என்பதைக் கூறி மன்னிக்கும் மனப்பக்குவத்தை அறிவுரையாக எடுத்துரைக்கின்றார். அதே வேளை காவல்துறையானது கிளர்ச்சியை அடக்கி வரும் போது புரட்சித்தலைவன் தப்பி ஓடிவந்து அநாதை விடுதியில் புகுகின்றான் அவனை பழிவாங்கத் துடித்த தனிநாயகம் இறுதியில் மனம்மாறி அவனை மன்னித்துக் காப்பாற்றுகின்றார்.

மன்னிப்பின் மகத்துவத்தினை நாடகம் அழகாகக் கூறுகின்றது.

**'நானே குற்றவாளி'** என்ற நாடகமானது ஐந்து அங்கங்களைக் கொண்ட நாடகமாகும். இது ஒரு துப்பறியும் கதையை ஒத்த வகையில் சாமிநாதர் என்பவரின் கொலையுடன் ஆரம்பிக்கின்றது. அவனைக் கொலை செய்தவன் இராசநாயகம் என்ற குருவானவரிடம் பாவசங்கீர்த்தனம் கேட்டுவிட்டு மறைந்து விடுகின்றான். இறுதியில் குற்றப்பழி குருவானவரில் விழுகின்ற போதும், அவர் பாவசங்கீர்த்தன இரகசியத்தினை வெளிப்படுத்தாது போராடுகின்றார். இறுதியில்குற்றவாளியே மனம் மாறித் தன்னை வெளிப்படுத்தி குருவானவரின் பண்பைப் போற்றுகின்றான்.

**'அருளும் கறுப்பனும்'** என்ற நாடகமானது ஓர் குறு நாடகமாக இரண்டு பாத்திரங்களை மட்டும் கொண்ட நாடகமாகக் காணப்படுகின்றது. இதுவும் வ.ப.ல.தேயோலியே சுவாமியார் எழுதிய 'லெபதிப் போவர்' என்ற பிரஞ்ச் கதையினைத் தழுவி எழுதியதாக ஆசிரியர் குறிப்பிடுகின்றார். அருள் என்ற சிறுவனுக்கும், கறுப்பன் என்ற வறிய சிறுவனுக்கும் எற்படுகின்ற உறவு, கடவுள் நம்பிக்கையற்ற கறுப்பனுக்குக் கடவுள் நம்பிக்கையினை ஏற்படுத்துவதாக கதை அமைகின்றது. பகிர்ந்து வாழ்தலின் அவசியத்தினை நாடகம் வலியுறுத்துகின்றது.

அருட்தந்தை அவர்களின் நாடகங்கள் மேற்கத்தைய நாடகங்களின் தொடக்கம் வளர்ச்சி உச்சம் முடிவு போன்ற நியம நாடகக் கட்டமைப்புக்களுடன் ஆக்கப்பட்டுள்ளதுடன் சிறப்பான மொழி நடையைக் கொண்டவையாகவும் அதேநேரத்தில் கிறிஸ்தவ விழுமியங்களை, பிரச்சாரப் பாங்கற்று கலைத்துவத்துடன் மிகவும் அழகாகச் சொல்லுகின்ற நாடகங்களாகவும் அமைந்துள்ளன. கத்தோலிக்க நவீன நாடகங்களிற்குத் தொடக்கமாக இந்த நாடகங்கள் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

மொத்தத்தில் யாழ்ப்பாணத் தமிழ்க் கத்தோலிக்கர்களின் மனங்களில் வாழுகின்ற அருட்தந்தை லூயிஸ் டெய்சி அவர்கள் தனது நாட்டினை விட்டு வந்து முழுமையாக இங்கு வாழ்ந்து. அளப்பரிய வகையில் பணியாற்றியது மட்டுமன்றி எமது தமிழ் கலை இலக்கியத் துறைக்கும் சிறப்புச் சேர்த்துள்ளார். அவரது வாழ்வும் பணியும் அர்ப்பணிப்புள்ள குருத்துவ துறவற வாழ்வுக்கு நல்ல முன்னுதாரணமானதாகத் திகழ்கின்றது.

(இக்கட்டுரைக்கு உதவிய நூல்கள் : 'Our Tribute'- Phillp Jesuthasan, Volume -iii, part-2, 'சில்லாலையம்' சில்லாலை புனித கதிரை மாதா ஆலய 60 தாவது சிறப்பு மலர், மற்றும் லூயிஸ் டெய்சி அடிகளின் நூல்கள் )


## 5ம் ஆண்டு நினைவலைகள்!

அன்னை மடியில் 13 . 05 . 1948



ஆண்டவன் அடியில் 23 . 10 . 2015

அருட்தந்தை இராயப்பு மரியநாயகம்
Rev.Fr.Dr.R. MARIYANAYAGAM - OMI

ஆண்டுகள் ஐந்து ஆகிறது
பிரிவின் வலி நீள்கிறது!
எங்கு காண்போம் உங்கள் திருமுகத்தை!
ஐந்தல்ல, ஐந்நூறு ஆண்டுகள்
சென்றாலும்
தீராது எம் ஏக்கம்!

இறை அமைதியில் துயில் கொள்ளுங்கள்!!

AD62

மீளா துயருடன்
குடும்பத்தினர்


# கூடுதலான அமைதி இவ்வுலகிற்குத் தேவை

**– திருத்தந்தை –**

நம்பிக்கையின் வலிமையைக் கொண்டு, அனைத்து மோதல்களையும் முடிவுக்குக் கொணர்வதற்கு, அனைத்து மதத்தலைவர்களையும் நான் அழைக்கிறேன் என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், அக்டோபர் 20, நடைபெற்ற ஒரு பன்னாட்டு, பலசமயக் கூட்டத்தில் கூறினார்.

"எவரும் தனியாகக் காப்பாற்றப்படுவதில்லை. அமைதி மற்றும், உடன் பிறந்த உணர்வு" என்ற தலைப்பில், உரோம் நகரின் Campidoglio குன்றில் அமைந்துள்ள காப்பித்தோலீனே (Capitoline) சதுக்கத்தில், 'சான் எஜிதியோ' என்றழைக்கப்படும் பிறரன்பு அமைப்பு ஏற்பாடு செய்திருந்த பன்னாட்டு, பலசமயக் கூட்டத்தின் ஆரம்பத்தில் வழங்கிய உரையில் இவ்வாறு கூறினார்.

திருத்தந்தை புனித 2ம் யோவான் பவுல் அவர்கள், திருஅவை வரலாற்றில் முதல் முறையாக, பல்வேறு மதத்தலைவர்களுடன், உலக அமைதி வேண்டி, 1986ம் ஆண்டு அக்டோபர் 27ம் தேதி, அசிசி நகரில் நடத்திய முதல் பல்சமயக் கூட்டத்தை, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், தன் அறிமுக உரையின் துவக்கத்தில் நினைவுகூர்ந்தார்.

அந்தக் கூட்டம், உலகில் நம்பிக்கை விதையொன்றை ஊன்றியது என்று கூறிய திருத்தந்தை, அதைத் தொடர்ந்து, இறைவன் அருளால், உலகில், அமைதியையும், உடன்பிறந்த உணர்வையும் வளர்க்க, பல்வேறு மதத்தலைவர்கள் முயற்சிகள் மேற்கொண்டு வருவதைக் குறித்துத் தன் மகிழ்வை வெளியிட்டார்.

மதங்களுக்கிடையே உள்ள வேறுபாடுகள், நமக்குள் பகைமையை உருவாக்கக்கூடாது என்பதை, மத நம்பிக்கையாளர்கள் புரிந்துகொண்டுள்ளனர் என்று தன் உரையில் கூறிய திருத்தந்தை, போர் மற்றும் வெறுப்பு என்ற தீமைகளுக்கு முன், செயலற்று நிற்காமல், மதநம்பிக்கையாளர்கள் அமைதியை உருவாக்குபவர்களாக செயற்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

அக்கறையற்றிருக்கும் நிலைக்குப் பதிலாக, அமைதி, இன்னும் கூடுதலான அமைதி இவ்வுலகிற்குத் தேவை என்ற உணர்வு பூர்வமான விண்ணப்பத்தை, திருத்தந்தை தன் உரையில் விடுத்தார்.

போர் என்ற தீமையை வளர்க்கும் அக்கறையற்ற நிலை, கொள்ளைநோய் பல நாடுகளில் நடைபெற்று வரும் போர்களைக் குறித்த செய்திகள் நமக்கு பழக்கமாகிப் போனதால், அவற்றைக் குறித்து நாம் அதிகம் அக்கறை கொள்ளாமல் போகும் ஆபத்து உள்ளது என்ற எச்சரிக்கையை விடுத்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், போர், மற்றும் கொள்ளைநோயைக் குறித்து, வெறும் ஏட்டளவு விவாதங்களில் சிக்கிக்கொள்ளாமல், இந்த கொடுமைகளால் துன்புறுவோரின் காயப்பட்ட உடல்களைத் தொடுவதற்கு முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

### அமைதி, அரசியலின் முதன்மை நோக்கமாக...

அனைத்துப் போர்களையும் முடிவுக்குக் கொணர்வதும், அமைதியை நிலைநாட்டுவதும் அனைத்து அரசியல் தலைவர்களின் முதன்மையான கடமை. பிரச்சினைகளுக்கு, போர்க் கருவிகள் தீர்வு தரும் என்று எண்ணுபவர்கள், தங்கள் வாழ்வும், தங்களுக்கு நெருங்கியவர்கள் வாழ்வும் எவ்வளவுதூரம் பாதிக்கப்படும் என்பதை உணரவேண்டும் என்பதைத் தன் உரையில் வலியுறுத்திக் கூறினார் திருத்தந்தை.


## 51ஆவது ஆண்டு திருமண நாள் நினைவு



அமரர்
திருமதி மரியா மின்னொளி ஜூலியன்
(லூர்த்துமலர்)
19-10-2020

கிறிஸ்துவோடு என்றும் இருக்கின்றாய் என்பதை முழுமையாக நம்புகின்றோம். நியாயமான எம் தேவை நிறைவேற யேசுவிடம் எமக்காய் மன்றாடும்.

819, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.


என்றென்றும்
உம் நினைவுகளுடன்
அன்பான கணவர் ஜூலியன்

AD 66

## யாழ் ஆயருடனான இவ்வாரச் சந்திப்புக்கள்



இராணுவத்தின் 51ஆவது படையணியின் புதிய கட்டளைத் தளபதியாக பணிப் பொறுப்பேற்கும் மேஜர் ஜெனரல் சுமித் பிரேமலால் அவர்கள் யாழ். ஆயர் பேரருட் கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையைச் சந்தித்து ஆசி பெற்றதுடன், யாழ் நகரின் பாதுகாப்புநிலைமை பற்றியும் கலந்தாலோசித்தார். யாழ் நகரின் 512 ஆவது படைப்பிரிவின் கட்டளைத்தளபதியும் கூட இருப்பதைப் படத்தில் காணலாம்.



இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா அவர்கள் யாழ். ஆயர் பேரருட் கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையை யாழ். ஆயர் இல்லத்தில் சந்தித்து 20 ஆவது திருத்தம் மட்டில் தமிழர்களின் நிலைப்பாடு குறித்து யாழ். ஆயருக்குத் தெரிவித்ததுடன் ஆயரின் ஆலோசனைகளையும் பெற்றுக் கொண்டார்.

## அன்பியக் கேள்விக்கொத்துக் கணிப்பீடு



இலங்கையில் அன்பியம் ஆரம்பிக்கப்பட்டு 25 ஆண்டுகள் (1995-2020) நிறைவடைவதை முன்னிட்டு பங்குகளிடையே நடத்தப்பட்ட கேள்விக் கொத்திற்கான கணிப்பீடு யாழ் மறைமாவட்ட அன்பிய ஆணைக்குழு இயக்குநர் அருட்பணி A.மில்பர்வாஸ் (CMF) அடிகள் தலைமையில் 08.10.2020 அன்று யாழ். கிளாரட் அகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மறைக்கோட்ட அன்பிய இணைப்பாளர்களும் கலந்து கொண்டனர்.

## கத்தோலிக்க ஊடக அமைப்பின் மறைக்கோட்ட இணைப்பாளர் கூட்டம்



யாழ் மறைமாவட்ட கத்தோலிக்க ஊடக அமைப்பின் மறைக்கோட்ட இணைப் பாளர்களுக்கான கூட்டம் யாழ் மறைமாவட்ட சமூகத் தொடர்பு ஆணைக்குழு இயக்குநர் அருட்பணி A.அன்ரனி ஸ்ரீபன் அடிகள் தலைமையில் யாழ் மறைக்கல்வி நடுநிலையத்தில் இடம்பெற்றது. தற்கால சூழமைவிக்கேற்ப சமூகத்தொடர்பு சாதனங்களைச் சிறப்பாகப் பயன்படுத்துவது பற்றிக் கலந்தாலோசிக்கப்பட்டது.

## நொச்சிமுனை புனித பேதுருவானவர் திருவிழா



மண்டைதீவு இறைமக்கள் 1991ம் ஆண்டு இடம்பெயர்ந்து 20 வருடங்களாக குமுழமுனைப் பங்கில் நொச்சிமுனைப் பகுதியில் வாழ்ந்த போது தமது பாதுகாவலராம் புனித பேதுருவானவர்க்கு விழா கொண்டாடி மகிழ்ந்தனர்.

தொடர்ந்து அங்கு வாழும் இப் பகுதி இறை மக்களால் கடந்த வாரம் புனித பேதுருவானர் திருவிழாக் கொண்டாடப்பட்டது. திருவிழாத் திருப் பலியை புதிய குரு அருட்பணி சந்திரதாஸ் ஒப்புக் கொடுத்து தமது இளமைக்கால இறை அனுபவத் தைப் பகிர்ந்து கொண்டார்.

## யூபிலிக் கட்டடம் திறப்பு விழா



பண்டத்தரிப்பு புனித பற்றிமா அன்னை ஆலய எழுபத்தைந்தாவது ஆண்டு யூபிலி விழாவை நினைவுகூறும் வகையில் அமைக் கப்பட்ட யூபிலிக் கட்டடத்தை யாழ் ஆயர் பேரருட் கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்கள் கடந்த 13.10.2020 அன்று ஆசீர் வதித்துத் திறந்து வைத்தார். இவ் யூபிலிக் கட்டடப் பணிகளை ஆலயப்பங்குத்தந்தை அருட்பணி M.A.P.R. மைக்கல் சவுந்தரநாயகம் அடிகளார் சிறப்புற மேற்கொண்டிருந்தார்.

## கிளரேசியன் பொது மாநாட்டுக்கான ஆரம்பக்கலந்துரையாடல்



கிளரீசியன் துறவற சபையின் 2021ம் ஆண்டிலிருந்து தொடர்ந்து வரும் ஆறு ஆண்டுக்கான செயற்திட்டம் பற்றிய கலந்துரையாடல் அருட்பணி A.மில்பர்வாஸ் (CMF) அடிகள் தலைமையில் 12.10.2020 அன்று யாழ் கிளாரட் அகத்தில் இடம்பெற்றது. இதில் அருட்பணியாளர்களும், அருட்சகோதரிகளும், கிளரீசியன் சபைப் பொதுநிலையினர் அமைப்பின் உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

## சமய சமூக நல்லுறவுக்கு ஊடகவியலாளரின் பங்கு – ஒரு கருத்தமர்வு –



கியூடெக் கரித்தாஸ் சர்வமத சகவாழ்வு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஊடகவியலாளருக்கான கருத்தமர்வு யாழ் கியூடெக் கரித்தாஸ் மண்டபத்தில் அருட்பணி S. இயூஜின் பிரான்சிஸ் அடிகள் தலைமையில் நடைபெற்றது.

"சமயங்களுக்கிடையிலான மற்றும் சமூகங்களுக்கிடையிலான சமாதான நல்லுறவு வலுவூட்டலில் ஊடகவியலாளரின் பங்கு" எனும் தலைப்பில் ஊடகவியலாளர் நிலாந்தன் சிறப்புரையாற்றினார். நல்லிணக்கம் யாரோடு யார் மேற்கொள்ள வேண்டும் என்பதைத் தீர்மானிக்காது. நல்லிணக்கத்ததை அடைய முடியாது. முரண்பட்ட மனிதர்கள், குடும்பங்கள், சமூகங்கள், இனங்களிடத்தில் நல்லிணக்கம் ஏற்படுவதில் உள்ள ஆர்வம், அதனை முன்னெடுப்பதில் முரண்பாடற்ற இனம் காணப்படல் மிக முக்கியமானது. சமநிலைத்தன்மையுடன் முன்னெடுப்பதாலே தான் இவை சாத்தியமாகும் என்பது இக்கருத்தமர்வில் வலியுறுத்தப்பட்டது.

## பருத்தித்துறைப் பங்கில் தேசிய மறைக்கல்வி வாரம்





மறைக்கல்வி மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும் மறைக்கல்வியின் அவசியத்தை ஊக்குவிக்கும் முகமாக தேசிய மறைக்கல்வி வாரம் 13.09.2020 தொடக்கம் 20.09.2020 வரை அனுசரிக்கப்பட்டது. இவ்வாரத்தில் விசேட மறைக்கல்விக் கருத்தமர்வுகளும், மாணவர்களுக்கான பாசறையும், இடம்பெற்றன. மேலும் மாலை நேர கத்தோலிக்க குறும்படக்காட்சிகளும் இடம்பெற்றன. இறுதிநாள் நிகழ்வாக மறைக்கல்வி சிறப்புத் திருப்பலியும், மாலை கலை நிகழ்வுகளும் நடைபெற்றன. மறைக்கல்வி சிறப்புத் திருப்பலியை அருட்தந்தை எமில்போல் அடிகளார் தலைமை தாங்கி ஒப்புக்கொடுத்தார் "எல்லோருக்கும் மறைக்கல்வி" என்ற தொனிப்பொருளில் குழந்தைகள் முதல் முதியோர் வரை மறைக்கல்வி கற்கின்ற அவசியம் பற்றி தமது மறையுரையில் குறிப்பிட்டார்.

பருத்தித்துறைப் பங்கிலுள்ள அனைத்து ஆலயங்களைச் சேர்ந்த மாணவர்களும், மறையாசிரியர்களும் பங்குபற்றியது குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் இல. 360, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2020ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 25ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.